
# அலை ஓசை



**MAY/JUNE '90**

லண்டனில் இருந்து வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Siv-Raj Group

## Travel Service

*OPENING: 1ST MAY 1990*

We are pleased to announce the re-opening of our travel operations at a new location in the U.K., in association with East West Tourist Services Ltd of Sri Lanka.

Our re-structured operation will provide customers with a fully integrated travel service world-wide.

We will offer the most competitive air fares available, to and from Colombo, on scheduled air lines.

We will also be providing additional services to our customers as below:

* Advice on visas and travel requirements to bring relatives/friends to the U.K. * Excess baggage and freight * Hotel accomodation in Sri Lanka at competitive rates in 4/5 star hotels. * Car hire in Sri Lanka - self/chauffeur driven. * Bookings of internal flights between Colombo and Jaffna. Transport service to the city from the airport.

Other establishments and services of the Siv-Raj Group include:

* The Verandah Restaurant in London * Vino-Vita Foods &Wines in Kent * Distributors of Sri Lankan foods to retail outlets in the U.K. * Importers and exporters of Sri Lankan groceries to Europe, Canada and USA * Distributors of Tamil compact discs (CDs) and audio cassettes.

*61, High Street, Sidcup, Kent. DA14 6ED Tel: 01-302 7151 Fax: 01-308 1141*

**If you wish a personalised service, please contact Siva on 01–302 7151**

**Office in Sri Lanka: East West Tourist Services Ltd**

**46/34, Navam Mawatha, Colombo 2. Tel: 28806**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

தமிழ் - ஆங்கில விஞ்ஞான கலாச்சார மாதாந்த சஞ்சிகை

அலை 5 ஓசை 3 வைகாசி - ஆனி 1990

EDITORS:
*Bala Ravindran*
*K.Jeyakumar*

ASST. EDITORS:

TAMIL
*G.Meganathan*

ENGLISH
*Dr.S. Maheswaran*

SCIENCE & TECHNOLOGY
*P.Nanthacumar*

REPORTERS
*S.N. Raguram*
skandamoorthy

## இந்தியா - பாகிஸ்தான் போர் மேகம் விலகுமா?

இந்தியா - பாகிஸ்தான் தரப்புகளில் போர் ஆரம்பமாவதற்கு முன்னமேயே யுத்தக்கூச்சல் ஏற்பட்டவேளை, இரண்டுதரப்பு வெளியுறவு அமைச்சர்களான ஐ.கே.குஜ்ராலும், யாகூப் கானும் பேச்சுவார்த்தைக்கென நியூயோர்க் பயணமாவதைப் பார்த்து இரு நாட்டு மக்களும் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விட்டிருப்பார்கள். இருந்தாலும் எப்போதும் ஓரளவு உஷார் நிலையில் இருப்பவை இரு நாடுகளின் இராணுவங்கள். ஏற்கனவே எல்லை நோக்கி நகரத்தொடங்கிய இராணுவங்களுக்கு ஆதரவாக பயங்கரவாதிகள் என அழைக்கப்படும் பிரிவினைவாதிகள், உற்சாகம் கொடுத்தாலும் பல்வேறு வெளிநாடுகள் எப்போதும் இல்லாதஅளவிற்கு ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. ரஷ்யர்கள், அமெரிக்கர்கள், சீனர்கள் இப்படியே எல்லா வல்லரசுகளும் சமாதான முயற்சியில் இறங்கி, போரைத்தடுக்கவே விரும்புகின்றன. இதேபோலவே இலங்கை போன்ற சிறிய நாடுகளும் இரு நாட்டினதும் சமாதானத்தையே விரும்புகின்றன.

எனவே தற்போதைய நிலவரங்களின்படி இரு நாடுகளும் பேச்சுவார்த்தைக்கு இணங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதொன்று. எழுபது இலட்சம் காஷ்மீரிகள் காரணமாக 93 கோடி துணைக்கண்ட மக்கள் இன்னலுக்குள்ளாகும் நிலையைத் தவிர்க்க இந்தியாவும், பாகிஸ்தானும் ஏதாவது வழிமுறையைக் கண்டறிந்தாக வேண்டும்.

All right reserved. No part of this publication may be reproduced without prior written permission of the publisher. The publisher cannot accept any responsibility for claims or error articles, programs or advertisements published. The opinions expressed on the pages of this magazine are those of the authors and do not necessarily represent those of the authors and do not necessarily represent those of the publisher WALTHAM FOREST THAMIL SANGAM.

## HOW TO SUBMIT ARTICLES:

Readers are welcome to write to **ALAI OSAI** publication.Please send your articles to: **THE EDITOR, ALAI OSAI, 109 Philip Lane, Tottenham, London N15 4JR.**

*PUBLISHERS: WALTHAM FOREST THAMIL SANGAM, 104, BILLET ROAD, WALTHAMSTOW. E 17.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. மனித தர்மத்தின் தூதுவர் அன்னை திரேசா | 3 |
| 2. தப்புக்கணக்கு -(சிறுகதை ) | 6 |
| 3. குயில்பாட்டு - (கவிதை) | 8 |
| 4. நம்மிடம் ஏது குறை | 9 |
| 5. அத்தமிக்கும் போது அரிசி வரும் | 13 |
| 6. தமிழீழம் கண்ட அன்னை பூபதி | 15 |
| 7. கொல்லான் புலான் மறுத்தானை..... | 17 |
| 8. விஞ்ஞானமும்,தொழில் நுட்பமும் | 20 |
| 9. இரத்தக்கறை படிந்த சீருடைகள் (சிறுகதை) | 22 |
| 10.ஈழத்துச் செய்திகள் | 25 |
| 11.குறுக்கெழுத்துப் போட்டி விடை | 26 |
| 12.குறுக்கெழுத்துப் போட்டி விஞ | 27 |
| 13.பேசும் உள்ளங்கள் | 29 |
| 14.இலண்டன் செய்திகள் | 31 |
| 15.வெளிநாட்டுச்செய்திகள் | 37 |
| 16.சோடி சேர்ப்போமா | 39 |
| 17.சிறுவர் பக்கம் | 40 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித தர்மத்தின் தூதுவர் அன்னை திரேசா

நல்லதம்பி.சிவநாதன்

அரை குறையாகத் துடித்துக் கொண்டிருக்கும்...நாடி நாளங்கள் நரம்புகள் சுற்றிய எலும்புக்கூடுகளின் மத்தியில்,...மேலும் கீழும் ஏறி இறங்கும் நெஞ்சப்பாளங்கள் மத்தியில்... மண்டை ஓட்டுக்குள் புதைந்தும் புதையாமலும்.. திறந்தும் திறக்காமலும் தெரிந்து கொண்டு இருக்கும் காட்சியிழந்த பார்வைகளின் மத்தியிலும்... குறண்டிச் சுருண்டு போன கால்கள், கைகள்,விரல்கள் மத்தியிலும்...அம்புலன்சும் ஆஸ்பத்திரியும் நெருங்க முடியாத நிலையில்.... பணங்கொடுத்து மருத்துவம் செய்ய இயலாத நிலையில்...மரணமே மருந்தாகி...சிலேற்பமிழுக்க வாய் வழி நுரை தள்ள... கண்கள் மேல் நோக்கிக் குத்தி நிற்க... மரணத்தை "வா! வா! என்று வரவேற்று நிற்கும் மனித சீவன்கள் மத்தியில் ... மனித தர்மத்தின் சுகந்தத்தை நுகர்ந்து அனுபவித்த அன்புத் தாயார் அன்னை திரேசா அவர்கள்!



"Lord,make me a channel of your peace;
Where there is hatred,let me sow love;
Where there is injury,pardon;
Where there is despair,hope....
Grant that I may not so much seek to be
Consoled as to console,to be loved,as to love,
for it is in giving that we receive,
it is in pardoning that we are pardoned,
and it is in dying,that we are born to eternal life".

1979 இல், நோபல் பரிசளிப்பின் போது,800 இற்றுக்கும் அதிகமான குரல்கள், ஒஸ்லோ, நோர்வேயில் ஓட்டோ மக்னுவில்,அன்னை திரேசா அவர்களின் பிரார்த்தனையிற் கலந்தொலித்தன. இப்பிரார்த்தனை நிகழ்ச்சி, நோபல் பரிசளிப்பின் மரபிற்கு ஒரு திருப்பமளித்தது. பரிசளிப்பை ஒட்டி, வழமையாக ஒழுங்கு செய்யப்படும் விருந்துபசாரத்திற்காக, ஒதுக்கப்பட்ட 6,000 டொலர்களை, அன்னையார் கல்கத்தாவின் அனாதைகளுக்கு அனுப்பி வைத்து,இந்தத் தொகை, பல வறிய மக்களுக்கு... ஓராண்டுக்குப் பசி தீர்க்கப் போதுமானதாக இருக்கும் எனத் தெரிவித்தாராம்.40 ஆண்டுகளுக்கு முன்னர், கல்கத்தாவில் வறுமையில் வாடிய மக்களின் மத்தியில் சேவை செய்ய, அவர் சார்ந்த தர்மஸ்தாபன பொதுச் சேவையினால் அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, அன்னை திரேசா அவர்கள், ஆரம்பித்து வைத்த சபையின் தலைவியாக, உலக அனாதைகளுக்காக [redacted] ஆற்றிய தொண்டையும் சேவையையும் பாராட்டி, 1979ம் ஆண்டு, இவருக்கு நோபல் சமாதானப்பரிசளிக்கப்பட்டது உலகறிந்ததே.நியூ யோர்க் டைம்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மத சார்பற்ற சந்நியாசினி" (          ) எனக்குறிப்பிட்டுப் பாராட்டிப் பெருமை செய்தது. உலக ஜனநாயகத்தின் கரங்களுக்கு எட்டாமல் உலக நிர்வாகங்களின் கண்களுக்கு உதயமாகாமல் வான் தொட வளர்ந்து வரும் மனித நாகரீகத்தின் நிழலே படாமல் ஏழைகளுக்குள்... ஏழைகளாக வாழ்ந்த வாழ்கின்ற மக்கள் மத்தியில், கல்கத்தா வீதியில், அன்னை திரேசாவின் உலகப் பொதுச் சேவை 1950இல் ஆரம்பமானது.

அல்பானிய சந்ததியிற் பிறந்த இந்தச் சந்நியாசினி, கடந்த செப்டெம்பர் மாதம், இருதயக் கோளாறினால் பலமாகத் தாக்கப்பட்டு, மார்பு வலியினால் அவஸ்தைப்பட்டது குறித்துப் பாப்பரசர் அவர்கள், இந்த உலகத் தாயின் நலன் கருதி தமது தனியான பிரார்த்தனைகளில் மன்றாடி வந்தார் எனக் கூறப்படுகிறது.

செப்டெம்பரைத் தொடர்ந்து ஓரளவு குணமடைந்த போதிலும் கடந்த டிசம்பர் மாதம் அளவில், இவரது இருதயத்துடிப்பிற்குரிய துணைக்கருவி (HEART PACEMAKER ) பொருத்தப்பட்டது.

அன்னை திரேசா அவர்கள், தமது உடல் நலம் குன்றியதன் விளைவாக தமது உலகார்ந்த தர்ம ஸ்தாபனத்தின் பொதுச் சேவைச் சபையின் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்த செய்தியினை கடந்த ஏப்ரல் 11ந் திகதி வத்திக்கான் அதிகார பூர்வமாக உறுதிப்படுத்தியது.

அன்னையாரின் முடிவினை ஏற்றுக்கொண்ட போதிலும் மிகவும் மனக்கஷ்டத்தோடும் சங்கடத்தோடும், புனித பாப்பரசர் அவர்கள், இது விடயத்தில் தமது முடிவை எடுத்தாரென வத்திக்கான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

79 வயதையொட்டிய இந்தக் கன்னியாஸ்திரி அம்மையார், "எனது இலட்சியக் குறிக்கோளினை இளைய கரங்களிடம் தந்து செல்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

1910 ஆம் ஆண்டு ஆகஸ்டு 26ம் திகதி ஸ்கோப்ஜி, யூகோசிலாவியாவில் பிறந்த திரேசா அன்னையார், அவர்களின் இயற் பெயர் AGNES GONHXHA BOJAXHIN. (ஸ்கோப்ஜி, யூகோசிலாவியாவின் மக்கள் குடியரசுக்களின் ஒன்றான மசிடோமியாவின் தலைநகராக 2வது உலக யுத்தத்தின் பின்னர் உருவெடுத்தது.

"உலக மக்களே எனது மக்கள்" எனக் கருதி உணர்ந்து வாழ்ந்த திரேசா அம்மையார், அல்பானியக் கத்தோலிக்க அடியில் பிறந்த வளர்ந்தவர், என்று கூறுவதில் எதுவித அர்த்தமும் இருக்காது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

"ஏழைகளின் முன்னே இறைவன் ரொட்டித் துண்டின் வடிவிலேயே வரவேண்டும்" என்ற மனித தர்மத்தின் மாதிரியாக அன்னை திரேசாவின் அரும்பணி சார்ந்த தர்ம ஸ்தாபனச் சபை, கல்கத்தாவின் சேரிகள் மத்தியில் உருவாகி, இன்று உலகார்ந்தவோர் பேரியக்கமாக உருவாகி, இனம், மதம், மொழி, நிறம், நிலம் என்ற அத்தனை பேதங்களையும் கடந்து, உலகின் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் உச்சரிக்கப்படும் நாளாந்த வார்த்தையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

கல்கத்தாவின் வீடற்றோருக்கான இல்லம், 1952இல் இருந்து 50,000 இற்கும் மேலான நோயாளர்களைக் கையாண்டுள்ளதென்பதும் இந்த 50,000 இற்குள் ஒரு சிறிய வர்க்கத்தினரே கிறீஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

மனித தர்மத்தின் முன்னே, மனித நேயத்தின் முன்னே, எம்மதமும் சம்மதம் என்ற மேலான தத்துவத்தின் படி, திரேசா அம்மையாரின் பார்வையிலும் சரி, அவருடன் இணைந்து பணியாற்றிய கன்னியாஸ்திரிகளையும், மற்றும் வைத்திய அதிகாரிகளையும் பொறுத்த வரையிலும் சரி, மதக் கோட்பாடுகளும், வரையறைகளும் பிரச்சனையாகியதில்லை எனலாம். உதவிக்கு வந்தவரை மதமாற்றத்துக்குத் தள்ளும் நிலைமை அங்கு இல்லையெனலாம்.

நோய் வாய்ப்பட்டவரையும், இறப்பவரையும் தெருக்களில் இருந்து மீட்டு அவர்கள் அன்புடனும் மதிப்புடனும் ஆண்டவனின் குழந்தைகளாக இறக்க உதவுவதே எமது நோக்கம்' எனத் தமது இலட்சியத்தினை மிகவும் எளிதாக வெளிப்படுத்தி உள்ளார் அன்னை திரேசா அவர்கள்.

நோபல் பரிசினைப் பெற்றதையொட்டிப் பதிலளிக்கையில் "நான் இதற்குத் தகுதியானவள் அல்ல" என்று தமது மேன்மையை வெளிப்படுத்திய திரேசா அம்மையார், 1950 இல் ஸ்தாபித்த பொதுச்சபை, இன்று 400இற்கும் மேலான இல்லங்களை உலகம் பூராகவும் நிறுவி, மரணத்தை தழுவியும், நோய்வாய்ப்பட்டும் பசிப்பிணியில் வாடியும், உடுக்கவும் உறங்கவும் வழியற்றும், தாய்தந்தையரின் ஆதரவற்றும், அரவணைப்பிழந்தும் வேதனைக் கடலில் மிதக்கும் பல மக்களைப் பராமரித்து வருகிறது. இந்தச் சபையின் கன்னியாஸ்திரிகளிற் பலர், இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தனக்கும், தனது குடும்பத்திற்கும் வாழ்பவர்களுக்கும், 'தர்மம்' எனும் பெயரில் உண்டு கொழுத்திருப்பவர்களுக்கு அவித்துக் கொடுப்பவர்க்கும், அன்னை திரேசாவின் வாழ்வு ஒரு பாடமாக அமையுமென்பதில் எதுவித ஐயமுமில்லை. இன வெறியிலும், சமயவெறியிலும், தோல் வெறியிலும் சிக்கி..., உலக அமைதிக்கும், உலக சமாதானத்திற்கும், மனித நீதிக்கும், மனித தர்மத்திற்கும் ஊறு விளைவிக்கும் அரக்க சக்திகளுக்கும், அசுர அவதாரங்களுக்கும், அன்னை திரேசாவின் வாழ்வு ஒரு தேவதூதரின் செய்தியாக அமையுமென்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

பசிப்பிணியே.., பல பிணிகளின் பிறப்பிடமாக அமைகிறது. இல்லாமையும், வறுமையும் பல சமுதாயப் பிணிகளுக்கு விதையிடவும், பசளையிடவும் செய்கிறது. ஊழலும், லஞ்சமும் நிறைந்த அரசும் ஆட்சியும் நிர்வாகமுமே மனித தர்மத்தினை வேரோடு தகர்க்க நிற்கும் அரக்க வடிவம் எடுக்கிறது. உலக சனநாயக அமைப்புக்களில் பணம் படைத்தவர்களுக்கும், பலம் படைத்தவர்களுக்கும், கல்விமான்களுக்கும், பிரதிநிதிகள் மலிந்து கிடக்கின்றனர். இவர்கள் சிரித்தால் சிரிக்கவும் அழுதால் அழுவதற்கும் பலர் இருக்கின்றனர். ஆனால்.., இயற்கையின் கொடுமையால், மனித வர்க்கத்தின் கொடூர உணர்வுகளினால் வஞ்சிக்கப்பட்டு ஒரு நேரக் கஞ்சிக்குத் தவிக்கும் வயிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், அந்த வயிறுகளிடும் மந்திர ஓலங்களையும், பிரதிநிதிப்படுத்தவும், சுற்றி நிற்கவும் மனித உருவங்கள் முன்வருவதில்லை.

அனாதைகட்கு, ஏழையர்க்கு, வறியவர்க்கு, நோய் வாய்ப்பட்டு அங்கவீனமுற்றுச் சேரிகளில், வீதிகளில் அலையும் மக்களுக்குப் பிரதிநிதிகள், எல்லா மதங்களுக்கும், இனங்களுக்கும், நிலங்களுக்கும், நிறங்களுக்கும், பொதுவானவர்களாக... நூற்றாண்டுக்கு ஒருவராக வந்து செல்கின்றனர். அந்தத் தேவப் பிரதிநிதிகளில் ஒருவரே திரேசா அம்மையார் ஆவர்.

மேடும் பள்ளமும் நிறைந்த தரையில், அழுக்கு நீரின் குளிர்ச்சியை மொண்டு, வரும் துர்நாற்றக் காற்றினை உள்ளிழுத்து உறங்கியெழும் அந்த மனிதத் தேக்கங்களை உற்றுப் பார்க்க, அவர்களது தொற்று நோய்க் கிருமிகள் எங்கே நம்மையும் தொற்றிக் கொள்ளுமோ என்று அஞ்சி ஓடாமல் அவர்களை அள்ளி அணைத்து ஆதரவு தர அன்பு மழை பொழிந்து, அவர்களது உணர்வுகளுக்கு மதிப்புத்தர பணம் படைத்தவர்களின், பலம் படைத்தவர்களின் பட்டம் பெற்றவர்களின், சனநாயகம் தன்னை வளைத்துத் தலையைக் குனிந்து, அவர்கள் முன்னே நிற்பதில்லை.

தனது 40 வயதில் 1950 இல், கல்கத்தாவின் சேரிகளின் ஏழைகளின் மத்தியில் நடந்த அந்தப் பாதங்களையும், அந்தப் பாதங்களுக்குரிய அன்புக் கரங்களையும் அவர்களைப் பார்த்து அவர்களோடு அன்புறவு கொண்டாடிய அந்த அன்புத் தேவதையாம் திரேசாவின் தன்னலங்கருதாச் சேவையினையும் தொடர்ந்தும் உயிரோடு வைத்திருக்க, இளையகரங்கள் முன்வருமா?

என் பிள்ளையோடு என் சேவை முடிந்ததென்று படுத்துறங்கும் பாழ்பட்ட சமுதாயத்தில் அழுக்குடையும் மணக்கும் உடலுங்கொண்டு நடமாடும் மனித வடிவங்களுக்கு மதிப்புத்தரும் மனித மாணிக்கங்கள் உருவாகிட முடியுமா?

"BRAVE NEW WORLD " இன் பிரதிநிதிகள் நாமா, இல்லை, 1910இற் பிறந்து, தனது 19 வயதிலேயே பொதுச் சேவையில் ஈடுபட்டு, நாடு கடந்து இனங்கடந்து தன்னைத் தந்து சேவை செய்த திரேசா அம்மையாரா? என்ற கேள்விக்குப் பதில் தர முடியுமா?

1947இல், இந்தியா துண்டுபட்ட போது, வெள்ளமெனத் திரண்டு சென்ற அகதிகளை, அணைத்துத் தன்னை ஒரு புதிய சூழலில், ஒரு புதிய சந்தர்ப்பத்தில் இணைத்துக் கொண்டு, வாழ்வெலாம், தன்னை அர்ப்பணித்த அந்தத் தேவதையின் சேவையினை இந்த மனித நாகரீகம் மறந்தாலும், ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்க நிற்கும் புரட்சி உள்ளங்கள், மறந்திட மாட்டாதென்பது எமது நம்பிக்கையாகும். 1979இல் நோபல் சமாதானப் பரிசினைப் பெற்ற போது உலக அனாதைகளின் பிரச்சனையை, உலகறிய வைக்கும் நிகழ்ச்சியாக இதனைத் தான் நினைப்பதாக அன்னையார் குறிப்பிட்டுள்ளார்.

"ஆண்டவனின் குழந்தைகளின் காவலர்" என அன்னையாரைப் பெருமைப்படுத்தியுள்ளது, 'த ரைம்ஸ்'. (அன்னையாரின் லண்டன் விஜயங்களையும், இங்கு வாழும் இல்லமற்ற மக்களின் பிரச்சனை பற்றிய அவரது வேதனை பற்றியும், ஏப்ரல் 12 1990 ரைம்ஸ் இதழில் படிக்கலாம்)

பிரதிநலன் எதிர்பாராமல், யாரின் தூற்றலையும் போற்றலையும் பாராட்டாமல், எடுத்த குறிக்கோளினை முன்னெடுத்துச் சென்ற இந்த அம்மையாரைப் பெற்ற தாயையும், வளர்த்த தந்தையையும், அவர் பிறந்த மண்ணையும், அவரோடு உறவாடிய நண்பர்களையும், அவருடன் ஒத்துழைத்த சகலரையும், உலகின் பெரிய வர்க்கமான ஏழை வர்க்கம் மறந்திடப் போவதில்லை. வரலாறு மறந்திடப் போவதில்லை.

இந்த அம்மையாரின் வாழ்வு, நமது குழந்தைகளுக்குப் பாடநூலாக அமைய வேண்டும். பொதுநலச் சேவையுணர்வு, நம்மவர் மத்தியில் விதைக்கப்பட வேண்டுமாயின், திரேசா அம்மையார், போன்றவர்களின் வாழ்வும், அவர்களின் வழியும் பின்பற்றப்பட வேண்டும்.

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!

---

### அகில உலக ரீதியான கிரிக்கட் வீரர்

வருடாவருடம் சிறந்த கிரிக்கட் வீரர் ஒருவரை தெரிவு செய்து, அவருக்கு அவுஸ்திரேலிய நாடு பரிசளித்துக் கௌரவித்து வருகிறது. 1979-80 ஆம் ஆண்டுக்கான பரிசை, மே. இந்திய அணியின் தலைவரான விவியன் றிச்சார்ட்ஸுக்குக் கொடுத்து, இப்பரிசு வழங்குதல் முறை முதற் தடவையாக ஆரம்பிக்கப்பட்டது. இதே வீரர் 1983-1984இலும் 1984-85 இலும் மேலும் இரு தடவைகள் இப்பரிசைத் தனது அற்புத ஆட்டத்தினால் பெற்றுள்ளார். 1989-90ம் ஆண்டுக்கான பரிசு, இந்தத் தடவை பாகிஸ்தான் அணியின் தலைவர் இம்ரான். கானுக்குக் கிடைத்தது. சுமார் 72,000 அமெரிக்க டொலர் பெறுமதியான ஆடம்பரக்காரே பரிசளிக்கப்பட்டது. இப் பரிசை இந்த வீரர் என்ன செய்தார் தெரியுமா? பாகிஸ்தானில் எழுப்பப்படவுள்ள ஒரு வைத்தியசாலை (குழந்தைகளுக்கான புற்று நோய்ச் சிகிச்சைக்காக) நிர்மாணச் செலவுக்காக இக்காரை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். 'தாராள மனசு என்பது இதுதானோ?

### இசைக்குயில்

லதா மங்கேஷ்காரைப் பற்றி அறியாதவர்கள் யாருமே இல்லை எனலாம். இந்தியாவில் இசை உலகை ஏறத்தாழ 40 வருடங்களாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இவருக்குச் சினிமா உலகில் அதி உயர்ந்த பரிசு இந்திய ஜனாதிபதியால் இவ்வருடம் மே மாதம் 7ம் திகதி கொடுக்கப்பட்டது. அது என்ன பரிசு? பொன்னாடை போர்த்தப்பட்டு, ரூபா 10,000 (இந்திய ரூபா) பரிசாகக் கொடுக்கப்படுகிறது. வயது என்னவோ 60 ஆகிவிட்டாலும் இளமை குன்றாத இனிய குரலில் பாடும் இவர் உலகிலேயே அதிகூடுதலான பாசைகளில் (15 பாசைகள்) பாடுபவர் என்ற சாதனையைப் படைத்திருக்கிறார். கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்திலும் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்புக் கணக்கு

(சிறுகதை)

அ.ஜே.ஞானேந்திரன்

கடையை விட்டு வெளியே வந்து, தெருவில் நடக்க ஆரம்பித்த போது 'அப்பாடா' என்று நீண்ட ஒரு பெருமூச்சு அவனிடமிருந்து வெளிப்பட்டது. அசாதாரண வேகத்தில் படபடவென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்திருந்த இதயத்துடிப்பும், மெல்ல மெல்லப் பழைய நிலைக்குத் திரும்பலாயிற்று.

கையிலிருந்த தாள்களைப் பார்த்தான். ஒரு 50 ரூபாய், ஒரு 10 ரூபாய், ஒரு 5 ரூபாயோடு இன்னும் சில்லறையாகச் சில நாணயங்கள். அவன் வீட்டு அவசர தேவைகளுக்காகச் சில பொருட்கள் வாங்க 50 ரூபாயோடு அந்தப் பலசரக்குக் கடைக்குப் போயிருந்தான். மாத முடிவென்பதால் கடையில் நல்ல கூட்டமிருந்தது.

தனக்கு வேண்டியவற்றை வாங்கிக் கொண்டு அவன் கடைமுதலாளியின் மேசைக்கு வந்த போது முதலாளி தொலைபேசியில் மும்முரமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.

பில் கிளாக்கின் சிட்டையை முதலாளியிடம் ஒரு 50 ரூபாய் தாளுடன் நீட்டினான் அவன். தொலைபேசியைத் தலையைச் சாய்த்துத் தோளோடு அழுத்திக் கொண்டு பேச்சைத் தொடர்ந்து கொண்ட முதலாளி, பில்லையும் காசையும் வாங்கி, பில்லை ஒரு முறை நோட்டமிட்டு விட்டு பக்கத்தில் இருந்த ஒரு கம்பியில், ஏனைய பில்களோடு குத்திச் செருகி வைத்தார். காசுப் பெட்டியைத் திறந்து மீதியை அவனிடம் நீட்டிய போது, அதற்குள் ஒரு 50 ரூபாய் தாளும் இருந்தது அவனுக்குத் தெரிந்தது. பதட்டப்படாமல் மிகுதியை வாங்கிக் கொண்டு, அவன் வாங்கிய பொருட்களுடன் மெதுவாக வெளியே வந்து விட்டான். மிகுதியை எண்ணிப் பார்த்த போது அவர் 100 ரூபாய்க்கு மிகுதி தந்திருப்பது தெரிய வந்தது.

மனைவி, சீனி இல்லை, மா இல்லை, என்ற போது அவனுக்குப் பெரிய தர்மசங்கடமாக இருந்தது. காரணம் கையில் காசில்லை. முதல் நாள் கிடைத்த சம்பளம், கடன் பாக்கி, சீட்டுத்தொகை என்று கரைந்து, 60ரூபாயை எட்டிப் பிடித்திருந்தது. இன்னும் 30 நாட்களை ஓட்டியாக வேண்டும். 'பழைய குருடி கதவைத் திறவடி' என்று இனி யாரிடமாவது கடனுக்குப் போய் பல்லிளித்துக் கொண்டே நிற்க வேண்டும். ஒன்றில் பணக்காரனாக இருக்க வேண்டும். அல்லது பிச்சைக்காரனாக இருக்க வேண்டும். நடுத்தர வர்க்கத்தில் இருந்து கொண்டு சில வரட்டுக் கௌரவங்களுடன் 'இரண்டும் கெட்டான்' நிலைமையில் வாழுவதில் தான் எவ்வளவோ சிக்கல்கள் இருக்கின்றன.

சுந்தரத்துக்கு 7 வயதில் ஒரு மகள். சுந்தரம் ஒரு பிரைவேட் கம்பனியில் கிளாக்காக வேலை செய்கிறான். மாசா மாதம் கிடைக்கும் 1,400 ரூபா சம்பளத்தைத் தவிர வேறு வருமானமில்லை. 'ஓவர்டைம்' உழைப்பும் அபூர்வம். மகளுக்கு ஒரு சங்கிலி செய்ய வேண்டுமென மனைவி ஆசைப்பட்டதால், அலுவலக நண்பர்கள் சேர்ந்து ஆரம்பித்த சீட்டில் கலந்து கொண்டா மாதம் 500 ரூபா. பெரிய தொகை என்றாலும் சமாளித்து விடலாம் என்று நினைத்துச் சீட்டுப் போட ஆரம்பித்தான். 2வது சீட்டு அவனுக்கே கிடைத்தது. அழகான ஒரு சங்கிலியும் மகள் கழுத்தில் மினுமினுக்கிறது. ஆனால் வாழ்க்கைச் செலவு தான் உதைக்க ஆரம்பித்தன. ஒவ்வொரு மாதமும் சம்பளத்தை எடுத்துப் பிரித்துக் கொடுப்பதும், 2,3 நாட்களில் 100, 200, என்று கடன் வாங்குவதும் என்று வாழ்க்கை மா ஆரம்பித்திருந்தது.

வழமை போல் மாதச் சம்பளத்தை ஏறத்தாள முடித்து விட்டுக் கையில் 60 ரூபாயுடன் நின்ற போது தான் மனைவி அவனைக் கடைக்குப் போய் வரும்படி தூண்டினாள். பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த போது, மனச்சாட்சி அவனைக் குடைய ஆரம்பித்திருந்தது.

'இந்த 50 ரூபாய் என்னுடையதல்ல கடை முதலாளிக்குரியது. இதை நான் எப்படி என்னுடையதாக்க முடியும். அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். 'முதலாளியின் கடைக்குக் கொள்ளை இலாபம் கிடைக்கிறது. இந்த 50 ரூபாயால் அவனுக்கு ஒருவித நட்டமுமில்லை. பேசாமல் போ! என்றது மனச்சாட்சியின் இன்னொரு பக்கம்.

" வியாபாரம் செய்வதே இலாபத்திற்காகத் தானே. எத்தனையோ இலட்சங்களை முடக்கித்தானே அவனுக்கு இந்த இலாபம். போ போ, அந்த 50 ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிடு" என்றது மனச்சாட்சியின் நல்ல பக்கம்.

"பெரிய நேர்மைவான் தான். போய்யா போ. பொருட்களைப் பதுக்கிப் ப ஆனை விலை, குதிரை விலை விற்றுப் பணம் சம்பாதிக்கிறான் அந்த முதலாளி. இது உனக்கு ஒரு போனசாக்கும். பேசாமல் வீட்டுக்குப் போ." என்று விரட்டியது போக்கிரி மனச்சாட்சி.

மனங்குழம்பிய நிலையில் வீட்டுக்குப் போவதாக முடிவெடுத்துக் கொண்டு பஸ் ஏறினான் சுந்தரம். பாக்கெட்டிலிருந்த 100 ரூ பாக்கி இரும்பாகக் கனத்தது.

வீட்டுக்குள் நுழைந்த போது அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. அழுது கொண்டிருந்த அவன் மகள் சோபனா, அவனைக் கண்டதும் கேவிக் கேவி, 'அப்பா, அப்பா,' என்று அழத் தொடங்கினாள். பேயறைந்தவள் போல வெளிறிய முகத்துடன் அவனை எதிர்கொண்ட மனைவி, அவன் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டாள். ஏதோ அசம்பாவிதம் நடந்திருப்பது அவனுக்குத் தெரிந்தது.

என்ன நடந்தது சரோ? என்று மனைவியைக் கேட்க, அவளும் அழ ஆரம்பித்து, நடந்த கதையைச் சொல்லி முடித்த போது, அதிர்ச்சியில் அவனும் பேயறைந்தவன் போலானான்!

மூன்று வீடுகள் தள்ளியுள்ள சிநேகிதியின் வீட்டுக்கு விளையாடப் போயிருக்கிறாள் சோபனா. விளையாடி விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது மெல்ல மெல்ல இருட்ட ஆரம்பித்திருந்தது. தெருவில் யாருமே இல்லை. சோபனா, முற்றிலுமே எதிர்பாராத விதமாக வேகமாக வந்த ஒரு கார், அவள் முன்னே திடீரென பிரேக் போட்டு நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு முரடன், கையிலிருந்த கத்தியால் சோபனாவின் கழுத்தருகே வருடிய போது சோபனா அதிர்ந்து போனாள். பயத்தில் உடல் வெட வெட வென்று நடுங்கியது. மின்னல் வேகத்தில் கழுத்திலிருந்த ஒரு பவுண் சங்கிலி அவன் கைக்கு மாறியது. அதிர்ச்சியில் அவள் சிலையாக நிற்க, அவன் காரில் தாவிக் குதித்துப் போய் விட்டான்.

இதுதான் மனைவி சரோவின் கதை. இப்பொழுது அவனுக்குச் சேராத 50 ருபாய் தாள் அவன் பக்கெட்டில் பாறாங்கல்லாய்க் கனத்தது. மேலதிகமாகக் கிடைத்த 50 ருபாய், சில நாட்கள் செலவழிக்கப் போதும், என்று அவன் போட்ட கணக்குத் தப்பாகி விட்டது. அவனுக்கல்லாத ஒன்றை உரிமை கொண்டாடப் போய், அவனுக்குரியதை , வேறொருவன் உரிமை கொண்டாடி விட்ட அவலமான உண்மை மனத்தில் உறைத்தது. ஒரு முடிவோடு வெளியே நடந்தான். முதல் வேலையாக இந்த 50 ருபாயைத் திரும்பிக் கொடுத்து விட வேண்டும்.


**VERANDAH**

A TASTE OF PARADISE

**Indian and Sri Lankan Tandoori Cuisine**

**Our Specialities include Dosai,Masala Dosai Fried Pittu, Godamba,**

**Biriyani, Indi Appam, Kothu Roti, Fresh Crab, Mutton, Chicken,**

**Fish & Squid Curry cooked in authentic Sri Lankan style;**

**Also Specially Vegetarian dishes**

**Come and try our Eat as much as you like Sunday Buffet Lunch**

**at only £6.95 per head.(£3.50 children)**

**OPENING HOURS Sunday 12 Noon to 3.30**
**Sunday-Thursday 6.00p.m. - 11.30 p.m.**
**Friday/Saturday 6.00p.m. - 12 midnight**

**for Reservations,Telephone:**


**081-659 1185 081-659 6348**

**150, High Street, Penge,London SE20**

**The most spacious Sri Lankan restaurant in Europe**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயில்பாட்டு



சந்தனத்துக் காத்து வந்து...
சங்கதியைச் சொல்லி விட்டு..
அந்தரத்தில் திரும்பி ஓடுது! – நெஞ்சில்
ஆனந்தப் பூ அரும்பி ஆடுது!

அந்தி வானச் சேர்க்கையிலே...
அவள் முகத்தைப் பார்க்கையிலே...
சந்திரனும் சர்ப்பமாடுது! –மனக்
கவலையெல்லாம் அற்பமாகுது!

நிலக் கரத்தின் அணைப்பினிலே...
அவளடிகள் அசைகையிலே...
மலர்ச்சரம் போல் மேனியாடுது! – என்
உளக் கரங்கள்.. அணைக்க ஏங்குது!

மாதவளின் வசம் நெருங்கி...
மாதுளையின் ரசம் பருக...
காதல் வரம் உயிர் இரக்குது! –மனம்
ஊதுலையில் தவம் இருக்குது!

– கவரிமான் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மிடம் ஏது குறை

புலவர்

நம்மிடம் ஏது குறை?

இந்த நானிலமும் வியக்கும் நல்லறிவு படைத்தவர்கள் நாம்! பட்டங்கள் பெறுவது நமக்குக் கைவந்த கலை! எட்டுத் திசையிலும் எம்மவர்கள் வாழாத நிலமுண்டா? உலகின் பல்வேறு துறைகளையும் பதம் பார்த்தவர்கள் நாம்! வெவ்வேறு கரைகளில் ஏனைய அரசுகளின் நிர்வாகங்களுக்கு அறிவுரை வழங்கும் தகுதி பெற்ற வல்லுநர்களை நமது நிலம் பெற்றுப் பெருமை கொண்டுள்ளது. பேராசிரியர்களின் பட்டியலைப் பார்த்தால், அது நீண்டு வளர்ந்து செல்லக் காண்போம். ஆய்வுகள் செய்வதில் நம்மவர்க்கு நிகர் நம்மவர் தானே? கணிதமா? விஞ்ஞானமா நிலவள..நீர்வள..வான்வள..கடல்வள... ஆராய்ச்சிகளில் நம்மவர் இல்லாத இடமெது? நம்முள் ஒவ்வொரு தனி மனிதனும் ஒரு தனிப் பல்கலைக்கழகமல்லவா? சட்டமா? சாஸ்திரமா, சமயமா? இவற்றையெல்லாம் கரைத்துக் குடித்தவர்கள் அல்லவா நாம்? இவ்வளவும் நிறைந்த நாம் உலக இனங்களுள் ஒரு பெருமை வாய்ந்த இனமாக வாழாமைக்குரிய காரணம் என்ன?

"தமிழன்" எங்கு வாழ்ந்தாலும் எப்படி வாழ்ந்தாலும்.. எந்நிலையில் வாழ்ந்தாலும் அவனுக்கென்று ஒரு தனித் தகைமையுண்டு.

அதுதான் "சுயநோக்கு".

தன்னைத்தானே சுற்றும் சுயநலப் போக்கு. அவனது முன்னேற்றம், அவனது சுய உணர்வு நோக்கியே இருக்கக் காண்கிறோம்.

என்னை விட்டால் யாரிருப்பர்? என்பவர் ஒரு சிலர். 'எனக்குத் தெரிந்ததை அவனுக்கேன் சொல்வான்' என்பவர் ஒரு சிலர். 'என்னைவிட இவனுக்கென்ன கனக்கத் தெரியும்' என்பவர் ஒரு சிலர்.

நான் தனித்து இயங்க வேண்டும். எனது அறிவை நான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பவர் ஒருசிலர்.

எனது பட்டங்கள் இத்தனை!! இந்தப் பட்டங்களுக்கு ஒரு மதிப்பு வேண்டாமா? என்பவர் சிலர். 'பல்கலைக்கழகப் படிப்புத்தான் படிப்பு. ஆங்கிலப்படிப்பு இல்லாதவன் பேசிட அருகதை அற்றவன்' என்பவர் ஒரு சிலர்.

நமக்கு எல்லாம் தெரியும் என்ற கண்முடித்தனமான, முர்க்கத்தனமான அறியாமையிருளிற் சிக்கிய புத்திஜீவிகளே, தமிழினத்தின் சீர்குலைவுகட்குக் காரணமெனலாம். தமது அறிவைப் பகிர்ந்து... ஏனையோரின் அறிவையும் பகிர்ந்து கொண்டு, ஒரு கூட்டிணைப்பில் கலந்து, ஒரு குழுவின் உறுப்பினர்களாகச் செயற்படக்கூடிய அறிஞர்களைச் சந்திப்பது அருமையாக இருக்கிறது. கூட்டு இயக்கம் (TEAM WORK) என்பது, தமிழர்களிடம் காணப்படாத ஒன்றெனலாம். ஒருவரையொருவர் சந்தித்து, புரிந்து.., ஒருவருடன் ஒருவர் இணைந்து செயலாற்றும் மனோபாவம் என்று எம்மிடம் பூத்துப் பொலிகிறதோ.., அன்றுதான் நாம் ஒரு வெற்றி நிறைந்த இனமாக வளரமுடியும்.

பொய், களவு, ஏமாற்று.., பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, இவை பொதுமைகொண்ட மனோபாவத்திற்கு எதிரானவை.

உள்ளத்திற் தூய்மையும், வார்த்தையிற் தெளிவும் உள்ளவர்களாலேயே, ஒரு கூட்டிணைப்பில் இயங்க முடியும். ஒருவருக்கொருவர் நம்பிக்கையுள்ளவர்களாக நாம் மாறுதல் வேண்டும். சாதி சமய வெறி உள்ளவர்கள், இடம், தொழில் பற்றிய ஏற்றத் தாழ்வுணர்ச்சிகள், பொதுமையுணர்வினை ஏற்படுத்த மாட்டாது. நாடு, மக்கள், மொழி என்ற தேசிய உணர்வுள்ளவர்களாலேயே, ஒரு கூட்டியக்கத்திற் பணியாற்றுதல் முடியும். பழந்தமிழிலக்கியங்களையும் சமய நூல்களையும் பெயரளவில் உருப்போட்டு வளர்ந்தோமேயொழிய அவற்றின் அடிப்படைத் தத்துவங்களைப் பின்பற்றிய வரலாறு நம்மிடம் இல்லை.

திருக்குறளையும், திருமந்திரங்களையும், வாய்க்குவாய் பேசக் கேட்டிருக்கிறோம். ஆனால் நாளாந்த வாழ்க்கையிலும்சரி, ஊர், நகர, நாட்டு விவகாரங்களிலும் சரி சுயநோக்குள்ளவர்களாகவும், குறுகிய மனோபாவங்கொண்டவர்களாகவுமே நம்மைநாம் பழக்கி வந்திருக்கிறோம். கல்வி நிறுவனங்களிலும், மற்றும் ஊடகங்களிலும் சாதி வெறியர்கள் தாண்டவமாடியதை நாம் அறிவோம். வீட்டுக்கு விளக்குப் போடுவதற்கும், இலஞ்சமும் ஊழலும் நம்முடன் நடைபோட்டது. வியாதிக்கு வைத்தியம் செய்யவும் பணப்பேயே தரகுபோனது. வீதிகள், தெருக்கள், மின்சாரவசதிகள் நீர் வழங்கல் இவற்றில் எல்லாம் நம்மவரது குறுகிய சிந்தனைகள், சிலந்திவலை கட்டியதை நாம் நினைத்துப் பார்க்க மறுக்கக்கூடாது. தன்னலமும், தான்தோன்றித்தனமும், இலஞ்சம், ஊழல், பகற்கொள்ளை போன்ற பாவச்சுரங்கங்களுமே, நமது நிர்வாகங்களை நடத்தும் எரிபொருள்களாகின. குறுக்கு வழியில்; உயர்ச்சியடையும் ஒரு சந்ததியின் வயிற்றிற் பிறந்தவர்கள் நாமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பயங்கர அழிவினூடு எமது போராட்டத்தை வழிநடத்தி, வெற்றிவீரர்களாக நம்முன்னே நமது விடுதலை வேங்கைகள் காட்சி தருகிறார்கள்.

எத்தனையோ ஆயிரம் தமிழர்கள் மத்தியில், தமது உயிரைத் துச்சமென மதித்துப் போராடி இந்திய சிங்கள இராணுவத் தாக்குதல்களை முறியடித்து ஒரு தேசிய இன விடுதலைக்கு எம்மைத்தள்ளி வந்துள்ளனர், ஒரு சிலஆயிரம் தமிழிளைஞர்கள். ஒரு போராட்ட அணியில், இந்த இளந்தளிர்கள் செய்த தியாகங்களும், காட்டிய மாவீர சாதனைகளும் நமது நாளைய சந்ததிக்குப் பயன்பட வேண்டுமாயின், ஏனைய தமிழர்களது நெஞ்சிலும், பொதுமைகொண்ட மனோபாவம் பூத்திடல் அவசியமாகிறது. சுயநலமும், சுரண்டலும் லஞ்சஊழல் வெறியும்உள்ளவர்கள்யாராவது இன்னமும் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய திட்டங்களை நிறைவேற்ற நிற்பார்களே யாயின் அவர்கள் தமது தலையிற்தாமே மண்ணள்ளி கொட்டியவர்களாவர். சமுதாய உணர்வு, மிகமுக்கி யமானது. ஒருவரையொருவர் மதித்து, ஒருவர் கருத்துக்கு மற்றவர் செவிசாய்த்து, ஒரு பரந்த இலக்குநோக்கி நாம் செயற்படுதல் வேண்டும். "செயற்பாடு" இல்லாத சிந்தனைகள் பயனளிப்ப தில்லை. ஆக்கம் பெறாத அறிவு ஒளிவிடுவதில்லை. கல்வி என்பதற்கு அர்த்தம் கல்லூரிப்படிப்பும், கலாசாலைப் பட்டமளிப்புக்களும் என்று கொண்ட சமுதாயம் இனியும் இனத்திற்குப் பயன்தரப்போவ தில்லை. இனஉணர்வும், சுயநலமற்ற பொதுமையுணர் வுங்கொண்ட சமுதாயமே ஒரு பொருளாதார, அரசியல், கலாச்சார பூரணத்துவங்கொண்ட ஒரு நாட்டையும், இனத்தையும் படைக்கமுடியும்.

அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து நம்மை மீட்டுக் கொள்வது ஒரு புறம்' மீட்டுக்கொண்டதன்பின்னர் நம்மை நாமே ஆள்வது மற்றொரு புறம். எமது கைகளில் இருவகையான பிரச்சினைகள் உள்ளன. ஒன்று நமது தாய்மார், மற்றது நமது மக்கள். மண்ணின் வளத்தை நிர்வகித்தல் எவ்வளவு முக்கியமோ அதுபோலவே எமது மக்களின் வளத் தையும் நாம் நிர்வகித்திடல் அவசியம். இங்கு தான் நமது நிர்வாகத்தின் திறமை எடைபோடப் படுகிறது.

தமிழரைப் பொறுத்தவரை,
அறிவு, அனுபவம், ஆற்றல், திறன் இவற்றிற்குப் பஞ்ச மில்லையெனலாம். ஒவ்வொரு தமிழனும் ஏதோ ஒரு வகையில் தனது பங்களிப்பைச் செய்யக்கூடிய நிலையில் இருப்பான்.
'கடும் உழைப்பு' தமிழனின் இரத்தத்தில் கலந்த ஒன்று. உழைக்காமல் உண்ணும் பண்பாடு நமக்குத் தெரியாத கலை. சோம்பேறித்தனம் எமது கலாச் சாரத்தில் தூற்றலுக்குரியது.
'பொதுவுடமை' என்ற பெயரில், எந்தச் சோம் பேறியும் அரசியற்கட்சி நிறுவி, நமது மக்கள் மத்தி யில் ஆதரவு பெற முடியாது.
சோம்பேறித்தனமும், வாய்வித்தையும், ஏமாற்றலும், சுரண்டலும், பொய் புழுகும், எமது மக்கள் மத்தி யில், ஓர் அரசியல் கட்சியை உருவாக்க மாட் டாது. அப்படி உருவாகும் கட்சிகள் நின்று பிடிக்க வும் மாட்டா.
வியர்வை சிந்தி உழைப்பவனை, ஓர் உன்னத பிர ஜையாகக் காண்பவர்கள் தமிழர்கள்.
நாட்டுணர்வு, இன உணர்வு, மொழியுணர்வு, இவற்று டன், உடல் வலிமையும், திட சித்தமும் உள்ளவர்களை யே மங்கையர் விரும்பும், புருசர்களாக்கியது, எமது இலக்கியங்கள். ஒரு சோம்பேறியை எமது பெண்கள் காதலிப்பது குறைவு. அப்படியும் காதலித்தால் அச் சோம்பேறித்தனத்திற்குள்ளும் ஒரு வலிமை நிச்சயம் இருந்து தான் ஆகும். அது அவனது பாட்டன் அல்லது கொப்பாட்டன் வீட்டுச் சொத்தாகவும் இருக்க லாம். எனினும் காலப்போக்கில் படித்துப் பட்டம் பெற்றவன் என்ற ஒரு தகைமையை மட்டும் வைத் து, இலட்சம் இலட்சமாகச் சீர்வரிசை கொடுத்து, பெண்கள் வியாபாரம் நடத்திய சீர்கேடு, நம்மைச் சூழ்ந்து கொண்டது.

பெண்ணினம் காட்சிப் பொருளாக்கப்பட்டு, பாடப் புத்தகங்களை மனனஞ்செய்து, பரீட்சைகளில் சித்தி யடைந்து, அரசாங்க உத்தியோகங்களை வகித்தவ களை பணம் படைத்தவர்கள், தமது பெண்களுக்கு மாப்பிள்ளையாக்கி, மகிழ்ந்த ஒரு வரலாறு நம்மிடை வந்தது.
இந்த நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்த நம மக்கள் மத்தியில், சீர்வரிசை கொடுக்க முடியாத வர்க்கமொன்று உருவாகிப்பல குமரப் பெண்கள், திருமணமாகாமல் நான்கு சுவர்களுக்குள் விம்மி வெடித்துச்சாகும் கேவலம் உருவாகியது. இந்தச் சந்தர்ப்பத்தில், வெளிநாடுகளில் மலிவுக்கூலிகளாக நம்மவர்கள் சென்று அந்நிய நாணயங்களைப் பெற்று அதன்மூலம் தமது பெண்களுக்குச் சீர்வரி அள்ளிக்கொடுத்து படித்துப் பட்டம் பெற்றவர் களைத் தமது மாப்பிள்ளைகளாக்கி வந்தும் இருக்கின்றனர்.
நாட்டுணர்வு, மொழியுணர்வு, இனஉணர்வு, உடல் வலிமை, திடசித்தம் கொண்ட ஒருவனை மதிக்கும் தன்மைமாறி பாடப்புத்தகங்களை மனனஞ்செய்து பட்டப்படிப்புப் பெற்றவனையே மகா புருஉ பட்டப்படிப்புப் பெற்றவனையே மகா புருஉ மதிக்கும் ஒரு இடைக்காலச் சந்ததி, நம்முன்னே உருவானது. இப்படியான ஒரு சந்ததியின் நடுவி லேயே ஒரு விடுதலைப் புரட்சி பூகம்பமாக வெடித்துக் கிளம்பி எமது இனத்தை... நிலத்தை கண்டத்தை... மட்டுமல்ல இந்த முழு உலகையுே அதிரச் செய்தது.
ஓர் ஆயுதப் போராட்டத்தில் நேரடியாக முழுத்தமிழர்களும் ஈடுபட்டாரில்லை. ஒரு சில ஆயிரக்கணக்கான தமிழிளைஞர்கள் மட்டுமே, உணர்வு பூர்வமாக, அறிவு பூர்வமாக, சிந்தனை பூர்வமாக கொள்கை பூர்வமாக, ஆத்மீகரீதியில் பௌதீக ரீதியாக விடுதலைப்போராட்டத்தில் பங்குபற்றினர், என்பதுதான் முழு உண்மையாகும் இந்த வட்டத்திற்கு வெளியே வாழ்ந்த தமிழர் களில் ஒரு சிலர் நிதி ரீதியில் உதவியும், இன்னெ சிலர் உணர்வு ரீதியாகவும் வேறு சிலர் அன்பு ரீதியாகவும் பங்கு பற்றியுள்ளனர். தமிழீழ மக்களைப் பொறுத்தவரை ஒரு விடுதலைப் போராட்டத்தின் மையத்தில் அதனுடைய பக்க விளைவுகளை மட்டுமல்ல நேரடியான தாக்கங் களை அனுபவித்தும், தாங்கியும் வந்திருக்கிறார்க ஒரு நேரம் உணவுக்குப் பிந்திவிட்டால் அதனை ஒரு பெரிய விடயமாக்கும் ஒரு சமுதாயத்தில் இருந்துகொண்டு தமிழீழ மக்களின் தாக்கங்கள புரிந்து கொள்வதும், உணர்ந்து கொள்வதும், நம்முட் பலருக்கு மிகவும் கடினமான காரியம இருக்கமுடியும். இப்போது நமது நாட்டு மக்களின் நிலைமையை ஒரு அகதிப்பிரச்சனை யாக்கி, உடுத்த புடவையையும், உண்ட எச்சத்தை யும், வீசியெறியும் ஒரு சில்லறைப் பிரச்சனைய கப் பார்த்து அருவருப்பவர்களையும் நாம் சந்திக்கின்றோம்.
இன்னும் சிலர், இனப் பிரச்சனையைக் காரணங் காட்டி நாடுவிட்டுப் புறப்பட்டு, அந்நிய நாடுகளிற் தஞ்சமடைந்தும் கூட தாம் வசதி படைத்த வாழ்க்கையினை அனுபவிப்பதோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை நிறுத்திக்கொண்டு தமது தாய்மண்ணைப் பற்றியோ, தாய்மொழியைப்பற்றியோ சிந்திக்கவும் மனமில்லாதவர்களாக வாழக் காண்கின்றோம்.
இன்னும் ஒருசிலர் நாம் என்றோ வந்தவர்கள், எப்படியோ வந்தவர்கள் நாம் பிரித்தானியக் குடிகள் என்ற மமதை கொண்டு மதம்பிடித்து அலைவதையும் பார்க்கத்தான் செய்கிறோம். நண்பர் சக்திவேலின் "லண்டனில் தமிழர் சந்ததி கொல்லப்படுகின்றதா?" என்ற கட்டுரையைச் சென்ற "அலை ஓசை" இதழில் படித்தேன். இன்னும் ஐந்து வருடங்கள் அதிகமெனக் கூறுவேன் ஆசியப் - பிரித்தானியக் குடிகள், ஒரு கொடுமையான ஜதார்த்தத்தின் தழும்புகளை ஏற்றிடும் நிலமையுருவாகுவதை வரலாறு சந்தித்துத்தான் ஆகும்.
நாம் யார்? நாம் யார்? என்று எமது குழந்தைகள் வீதியில் நின்று ஓலமிடப்போகிறார்கள். கறுப்புமில்லை, வெள்ளையுமில்லை, மஞ்சளுமில்லை என்று தங்கள் தோலைத் தாங்களே வெறுக்கும் நிலைக்கு நமது குழந்தைகள் தள்ளப்படப்போகிறார்கள்.
எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப், பிரித்துப் பெருக்கிப் பார்க்கும்போது நமக்கு ஒரேயொரு தீர்வுதான் தெரிய முடியும். எல்லாத் தமிழர்களது மூளைகளையும் உருவியெடுத்து ஒரு சமுத்திரத்திற் கொட்டிக் கடையவேண்டும். திருப்பாற் கடலில் வெண்ணெய் திரண்டதுபோல் தமிழ்த் தேசிய உணர்வு திரண்டு வரவேண்டும். சுயநோக்குச் சுட்டெரிக்கப்படவேண்டும். தமிழரின் மனோபாவங்கள் மாறிடவேண்டும். பொதுமைநோக்கு பூத்திடவேண்டும் பழைமையில் நம்மவர் சேகரித்த கொடிய வெறிகள் அழித்தொழிக்கப்படவேண்டும். சாதி வெறியரின் நெஞ்சில் சமதர்மப் பூங்கா உருவாகவேண்டும். சமயவெறியனின் ஆத்மாவில் சர்வமதங்களும் சங்கமமாதல் வேண்டும். மனித தர்மமும், மனிதனை மனிதன் மதிக்கும் பண்பும் தமிழரின் நெஞ்சில் விதைக்கப்படவேண்டும். தொழிலைத் தொழிலாகப் பார்த்து அதற்குரிய விஞ்ஞான ஆதரவுகளைத் தர எல்லோரும் முன்வரவேண்டும்.
அறிவை மூளையோடு வைத்திருக்காமல், உணர்வுகள் வழியே வெளியே தள்ளிக் கரங்களின் வழியே செயலாக்கி உழைப்பாக்கிப் பொருள் வளங்கொழிக்கும் ஓரினமாக நமது இனம் உரம் பெறவேண்டும். உறுதிபெறவேண்டும்.
"டாக்டரும், எஞ்சினியரும், எக்கவுண்டனும், லோயரும், தான் படித்த சமுதாயம் என்ற பாழ்பட்டுப்போன எண்ணத்தைப் பாடையில் வைத்து எரிக்கவேண்டும். இந்தப் படித்த முட்டாள்களுக்குத் தரப்படும் சீர்வரிசை, சீர்வரிசையில் நிறுத்தப்பட்டுச் சமுதாயத்தின் கழிவுப் பொருளெனக் காறியுமிழப்படவேண்டும். சீர்வரிசை வாங்குபவனோடு, கொடுப்பவனையும் திருத்துதல் வேண்டும். இயற்கையின் இழப்புகளால் வசதியும், வாய்ப்பும் இழந்து வாழும் மக்களுக்கு உதவிடும் உள்ளங்களும், உதவி நிறுவனங்களும் நம்மிடையே மலிந்திடவேண்டும்.
'எனது பிள்ளையை மேற்படிப்புப் படிக்க வைப்பதோடு எனது மனித கடமைகள் முடிந்து விடுகின்றன' என நினைக்கும் செக்கு மாடுகளின் சிந்தனையில் பொறி தட்டப்பட வேண்டும்!
விதவையரும், தாய், தந்தை அற்றவரும் உற்றார், உறவினர் இல்லாதவரும் வாழ்வு பெற, நல்லவர் உழைப்புப் பயன்பட வேண்டும். இன்றில்லாவிடினும் நாளை நமக்கொரு நாடு வேண்டும்.
நம்மிடமுள்ள ஒவ்வொரு திறனும், ஒவ்வொரு ஆற்றலும் நமது நாட்டை, இனத்தைக் கட்டியெழுப்பிடக்கூடிய ஆயுதங்கள். எதிரியை ஓட, ஓட விரட்டிய ஆயுதங்கள், ஓய்வெடுக்க நேரிடினும், எமது தேசியம் நோக்கிய எமது ஆயுதங்கள் ஓய்ந்துவிடக்கூடா!
தமிழனிடம் எல்லாமிருந்தும் ஒன்றுமில்லாதவனாக அவன் உலக அகதியாக, மலிவுக் கூலியாக, மாண்டுவிடக்கூடாது.
எமது சுய நோக்கினைத் தூக்கிலிடுவோம். பொதுமை நோக்குள்ளவர்களாக மாறுவோம். பொங்கலும் புத்தாண்டும் வயிற்றோடு நின்று விடக்கூடாது. எமது வாழ்வுக்கும் பயன்படட்டும்.
கலையும் கலாச்சாரமும் அந்நியருக்குக் காட்டுவதற்கு மட்டுமல்ல, இங்குள்ள நிறுவனங்களிடம் கிரான்ற்' எடுப்பதோடு எமது இன உணர்வு நின்றுவிடக்கூடாது. 'இமிகிரேசன் ஆபீசருக்கு' முன்னால் மட்டும் நாம், தமிழ்த் தேசியவாதிகளாகி விடக்கூடாது.
தேசிய உணர்வு இல்லாத எந்த இனமும் வெற்றிவாகை சூட முடியாது.
வெற்றிவாகை சூடிய இனங்களின் வெற்றிக்குரிய சூக்குமம் வேறெதுவுமில்லை!
தான், தனது பிள்ளைகள், என்ற சிந்தனைக்கு அப்பால் தனது மொழி, நாடு, உலகம் என்று சிந்தித்தவர்களே, தமக்கென்றொரு நாட்டினையும், இனத்தினையும், கட்டியெழுப்பியிருக்கிறார்கள்.
படிப்பு வேண்டாமென்று கூறவில்லை. பட்டங்கள் கூடாதென்று கூறவில்லை. உங்கள் தாயும், நாடும் மெச்ச, பூரிக்க, நீங்கள் உங்கள் பட்டங்களையும் பதவிகளையும் தலையில் சூட்டிக்கொண்டு நடவுங்கள்.
அண்மையில் லண்டனில் நடைபெற்ற 'தமிழீழ ஆய்வு நிறுவனத்தின், கருத்தரங்கு காணச் சென்றேன். சிறுகைத்தொழில்கள் குறித்த, தமிழீழத்தின் கூட்டுறவு, சமுதாய அபிவிருத்தி பற்றி உரையாற்றிய திரு. பரமோதயம் அவர்கள், தமது கட்டுரையில் 'ஈழம் கொமியூனிற்றி கொலிஜ்' என்ற ஒரு நிறுவனம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். இக்கல்லூரி பற்றி, அவர் விளக்கமாகக் கூறாது விட்ட போதிலும் அதனுடைய அவசியத்தை, நான் புரிந்து கொண்ட விதத்தை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.
கல்லூரி, கலாசாலையோடு கட்டுப்பட்ட பட்டப் படிப்புக்கு அப்பாற்பட்டு, சமுதாய உணர்வு செறிந்த, லஞ்சம், ஊழல், மற்றும் பழைமையான கேடுகளணுகாத, அநுபவரீதியான பயிற்சியும் கல்வியுமே ஒரு நாட்டின் மனித வளத்தைச் செப்பனுறப் பயன்படுத்த உதவும். தியாக உணர்வும் நீதியும் தர்மமும் கொண்டு, தன்னலமற்று இலக்கு நோக்கியுழைப்பைத் தரக்கூடிய மக்களாலேயே, ஒரு பெருமையும் சிறப்பும் கொண்ட ஒரு தமிழ் மண்ணைக் கட்டியெழுப்பிட முடியும்.
இப்படியான பயிற்சியையும், கல்வியையும் அளிக்க 'ஈழம் கொமியூனிற்றி கொலிஜ்' உதவுமென்ற கருத்தினையே திரு பரமோதயம், குறிப்பிட்டதாக நான் கருதியிருக்கிறேன்.
எனது கருத்துச் சரியாயின் இவ்வாறு பயிற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கூடிய நிறுவனங்கள், தமிழீழத்தின் ஒவ்வொரு நகரத்திலும் உருவாகுதல் வேண்டும்!

பல் தொழில், பல்கலை வல்லுனர்களும் கலந்து ஒருவர் அறிவையும் அனுபவத்தையும் மற்றவர் பகிர்ந்து கொள்வதோடு தத்தம் பலவீனங்களையும், பலங்களையும், மற்றவர் வாயிலாக அறிந்து தம்மைத் தாமே எடை போட்டு வளப்படுத்தி, தம்மையும் எமது இனத்தையும் தாய் மண்ணையும் முன்னேற்றப் பாதையில் தள்ளிட நம்மவர்கள் பயிற்சி பெற வேண்டுமென்பதே எனது அவாவாகும். கூட்டு (ரீம்) தலைமை (லீடர்சிப்), நிர்வாகம் (மனேஜ்மன்ற்), ஒழுங்குபடுத்தல் (ஓர்கனைசேசன்) தயார்ப்படுத்துதல் (பிளானிங்) மக்கள் தொடர்பு (கொமினியூகேசன்) என்ற இன்னோரன்ன துறைகளில் நம்மவர்கள் சிறந்த பயிற்சி பெறுதல் வேண்டும்.

தியாக உணர்வும் மாவீரமும் விடுதலைத்தாகமும் கொண்ட ஒரு சில ஆயிரம் இளைஞர்களின் அயராத உழைப்பினை அடிக்கல்லாக்கி, ஓரினத்தையும், நாட்டினையும் நாம் கட்டியெழுப்புதல் வேண்டுமாயின், நமது மனோபாவம் மாறுதல் வேண்டும்.

நமது சிந்தனை விரிந்திட வேண்டும்.

அண்மையில் நான் கேள்விப்பட்ட செய்தியொன்றினை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எண்ணெய் வள நாடுகளில் ஒன்றில் ஒரு தகப்பன் வேலை பார்த்து வருகிறாராம். தாயும் அவருடன் அங்கே தங்கியுள்ளாராம்.

அவரது பெண்பிள்ளைகள், இலண்டனில் ஒரு தனியார் கல்லூரியில் கல்வி பயின்று வருகிறார்கள். அவர்களுடன் இன்னும் இரு சகோதரிகள் படித்து வந்தனராம். அவர்கள் அப்பா, அம்மாவுக்கு எழுதிய மடலில் தம்முடன் கல்வி கற்கும் சகோதரிகள் பற்றிக் குறிப்பிட்டனராம்.

அம்மா அச்சகோதரிகளின் ஊர், பிறப்பு விபரங்கள் அறிந்து கொண்டதும் "அவர்கள் கீழ் சாதியினர், நீங்கள் அவர்களுடன் பழகுவது நல்லதல்ல, என்று எச்சரித்தாராம்.

அந்நியரின் கால் கழுவி வாழும் அடிமைச்சாதி தனக்குள்ளே சாதியை வைத்து இன்னும் கட்டி அழுது கொண்டு சாகிறது.

திரைகடலோடியும் அழிவினைத் தேடு என்று நிற்கிறது தமிழ்ச்சாதி.

முடிவாக...

எங்கள் நெஞ்சு மட்டும் மாறி விட்டால்

எம்மிடம் ஏது குறை?

*With Compliments*

**TILKO PROPERTY SERVICES**

**271, FOREST ROAD, WALTHAMSTOW, LONDON E17**
**TELEPHONE: 01-527 1810**

*OUR PROFESSIONAL TEAM OF STAFF WILL BE PROVIDING YOU WITH A COMPREHENSIVE SERVICE WHICH WILL INCLUDE:*

* **Buying or Selling your properties**
  *Special rates of commission -- Sole 1% Multiple 1.25%*
* **Complete Letting and Management**
  *Competitive rates*
* **Financial requirements**
  *Mortgages, Remortgages, etc.*
* **Home Improvement**
  *Planning permission, Extensions etc.*

*** Photocopy & Fax Facilities**

*Please come in for friendly chat with no obligations*

**WE CARE AND IT SHOWS**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தமிக்கும் போது அரிசி வரும்

செ.சிறீக்கந்தராசா

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப்புழி" என்று வள்ளுவன் பாடினான். ஏழைகளின் பசியைப் போக்குவது செல்வருடைய கடமை என்று வழுத்தினான் வள்ளுவன், அந்த நாளிலே பொதுக்கிணறு தோண்டுதல், சுமைதாங்கிக் கல் நடுதல், அன்னசத்திரம் நடாத்துதல், ஆ உரோஞ்சிக்கல் நடுதல் ஆகியவற்றை மேற்கொண்டார்கள். பொருள் படைத்தவர்களும், அருள் படைத்தவர்களும் நாயன்மாருடைய வரலாற்றைப் படித்தால் இந்த உண்மை புலனாகும். இலங்கையில் சிற்றூர்களில் காணப்படும் பொதுக்கிணறுகளையும், சுமைதாங்கிக் கற்களையும், குளங்களுக்குப் பக்கத்தில் காணப்படும் சொறிகல் போன்ற ஆ உரோஞ்சிக் கற்களையும் பார்க்கும்போது பழந்தமிழ் மக்களின் அருளுள்ளம் பட்டெனப் பளிச்சிட்டுத்தெரியும்.

அன்னசத்திரங்கள் பாவலர்க்கும், பாடுநர்க்கும் புலவர்க்கும் தஞ்சமளித்துக் காத்தன. அவ்வாறான தஞ்சம் கிடைத்தமையால் பாக்களும் மலர்ந்தன; பாடகர்களும் வளர்ந்தனர். வளர்ந்தனர் பாடகர் என்று சொன்னேன் தவறு; வளரவில்லை. தளராமல் ஆவது இருந்தார்கள். புலவர், கலைஞர் என்போரின் வாழ்க்கை எக்காலும் சிக்கல் நிறைந்ததாகவே இருந்தது. ஓர் இனத்தின் தனித்துவத்தையும், கலாசாரத்தையும் காப்பதற்கு அவர்கள் காலாக இருந்தும் சமுதாயம் அவர்களைப் புறக்கணித்தே வந்துள்ளது. அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை பஞ்சம் நிறைந்த வாழ்வாகவே இருந்துள்ளது. மோசிகீரனார் போன்ற ஒருசில புலவோரின் வரலாற்றை வைத்துக்கொண்டு, புலவர்கள் அனைவரது வாழ்க்கையும் மதிப்புக்குரிய ஒன்றாக இருந்தது என்று கூறிவிடமுடியாது.

அவ்வையான அவ்வையே கூழுக்குப் பாட நேர்ந்தது; கம்பன் போன்ற பெரும் புலவனே "நெற்கொண்டு போமளவும் நில்லாய் சுவரே" என்று இரந்தழுது பாடவேண்டி இருந்தது. சுருங்கச் சொன்னால் இன்றைய தமிழ்ச் சமுதாயம் கலைஞரை மதிக்கின்ற மாதிரித்தான் அன்றைய தமிழ்ச்சமுதாயம் கலைஞர்களை மதித்தது. இலண்டன் மாநகரில் எதற்கும் ஒரு விலை உண்டு. கலைக்கு மட்டும் விலையில்லை. சுப்பர் மார்க்கட்டில் சாமான் அடுக்குவோனுக்கு விலை உண்டு; பெற்றோல் செட்டில் நிற்போனுக்கும் விலைஉண்டு. தெருவில் குப்பை கூட்டுவோனுக்கும் விலைஉண்டு; ஆனால் கவிதை புனைவோனுக்கு விலைஇல்லை, மத்தளம் வாசிப்போனுக்கு விலைஇல்லை, ஓவியம் வல்லோனுக்கு விலைஇல்லை. பிடில் வாசிப்போனுக்கு, பாடுவோனுக்கு விலையில்லை. எதற்கும் பணத்தை இறைக்கத்தயாராக உள்ள தமிழ்ச் சாதி, தன்னினத்தின் தனிப்பண்பைக் கட்டிக்காக்க உதவியாக உள்ள கலையைப் பயின்றோருக்கு ஒரு விலை கொடுக்கத் தயங்குகின்றது; பின்னடைகின்றது. சும்மா வந்து பிடில் வாசித்தால் என்ன? ஓசியில் மிருதங்கம் வாசித்தால் என்ன; ஒருகாசும் இல்லாமல் பாடினால் என்ன என்று வெட்கமில்லாமல் கேட்கிறது வெளிவேடத் தமிழ்ச்சாதி. அன்றும் அப்படித்தான் கேட்டது தமிழ்ச்சாதி. ஆனால் அதனைத் தட்டிக் கேட்க இந்தக் கலைஞர் கூட்டம் துணியவில்லை. கலையின் பண்பினால் பணிந்தது. அதனால் பிச்சை எடுக்கும் நிலைக்குமேல் உயரவில்லைக் கலைஞர் இனம். அதனால் அடிக்கடி அன்ன சத்திரத்துக்குப் போய்க்கொண்டு இருந்தார்கள். அப்படி அன்னசத்திரத்துக்கு அலைந்த புலவர்களில் காளமேகமும் ஒருவர். ஒருநாள் காளமேகம் அவர்களுக்குச் சிறுகுடலைப் பெருங்குடல் விழுங்குகின்ற அளவுக்குப் பசிமேலிட்டது. எங்கு போவதென்று தெரியவில்லை. வழியில் "காத்தான்" என்பவரின் சத்திரம் தென்பட்டது. போனால் ஏதும் கிடைக்குமே என்று எண்ணி அதற்குள் நுழைந்தார். பொழுது சாய்ந்த நேரமாதலால் ஏதேனும் பொங்கல் உடனடியாகக் கிடைக்கும் என்ற நப்பாசையால் காத்திருந்தார். பின்னேரம் இரவாகி, நேரம் ஏழாகி எட்டாகி, ஒன்பதாகி பத்தொடு பதினொன்றாகி, பன்னிரெண்டாய், மறு நாளாய் விடிவெள்ளி எழுகின்ற நேரமாகிற்று. உணவுவந்தபாடில்லை. எழுந்து போய்விடலாமா என்று எண்ணினார். எழமுயன்றார், முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உடலில் வலுவில்லை. வேறெங்கும் உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுமில்லை. எனவே பொறுத்திருந்தார், பொருமியவாறே. விடிவெள்ளி எழுந்து, முதற் சாமக்கோழி கூவுகின்ற நேரம் இலையைக் கொண்டுவந்து போட்டு ஓர் அகப்பை உணவு இட்டார்கள். வயிறு பசித்த நிலையிலும் அவருடைய சினம் அடங்கவில்லை. சோற்றை உண்பதற்குப் பதிலாகப் பல்லோரும் கேட்க உரத்துப் பாடினார்.

இதோ அந்தப்பாடல்:-

"கத்துகடல்நாகைக் காத்தான் தன்சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையில் இட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும்".

.: .: .: *** .:.:.: *** .:.:.: *** .:.:.: *** .:.:.:

## அமரர் உயர்திரு அ. வ. பாலசுப்பிரமணியம் அவர்களின்



ஆறுவது ஆண்டு நினைவாஞ்சலி

முன்னாள்
தலவாக்கலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரும்,

மாவட்ட சாரண ஆணையாளரும்,

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின்
தலவாக்கலை பிராந்திய ஆணையாளரும்,

அகில இலங்கை சாரண பயிற்சித் தலைவரும்,

சிங்களம், தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புப் பேச்சாளரும்,

மயிலிட்டி சங்குவத்தைப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும்,

முன்னாள் மட்டக்களப்பு, அக்கரைப்பற்று கல்முனை, அம்பாறை
சாரண மாவட்ட ஆணையாளரும்,

முன்னாள் மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை
விரிவுரையாளருமான அமரர்

உயர்திரு அ. வ. பாலசுப்பிரமணியம்

## சமர்ப்பணம்

நேர்மையால் நிமிர்ந்த நெஞ்சம்
நினைப்பதை நடத்தும் ஆற்றல்
வாய்மைகொள் வீரம் கொண்டாய்
வணங்கிடா முடியைப் பெற்றாய்

முதுமொழிக் கவிதை ஆக்கும்
மும்மொழிப் புலமை பெற்றாய்
மொழிபெயர்ப் பிணுக்கே நீயும்
முதலிடம் பெற்றாய் இங்கே

தரணியில் நாளும் போதும்
தனக்கென வாழ்ந்தி டாமல்
சாரணீ யத்தின் தூணாய்ச்
சாரமாய் அமைந்து நின்றாய்

கலையகம் தன்னை ஆக்கி
மலையகம் தன்னைத் தூக்கி
உன்னுடல் ஈந்தாய் அங்கு
உயிரினை யமனுக் கீந்தாய்

காலனின் சீற்றம் கண்டே
கலங்கிடும் மனைவி மக்கள்
சிலையெனச் சமைந்து நின்றார்
சிந்திய கண்ணீரோடு

உன்னுடல் வெந்த தென்று
உன்மத்த ராஞர் மக்கள்
பொன்னுடல் பொசுங்கி னும்
புகழுடல் வாழு மிங்கே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழங் கண்ட அன்னை பூபதி




**அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் ஓராண்டு நினைவு அஞ்சலி தமிழீழ தாயகத்திலும், சர்வதேச ரீதியில் வாழும் தமிழர்களாலும் தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. அன்னையின் தியாகத்திற்கு அஞ்சலியாக இக் கட்டுரையை இங்கு வெளியிடப் பெறுகின்றது.**

"தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம்"

"தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை"

மேற்படி கோரிக்கைகளை முன் வைத்து அன்று தன் உயிரைத் தியாகம் செய்த அன்னைபூபதி கணபதிப் பிள்ளை உயிர் நீத்து இரண்டு ஆண்டுகளாகி விட்டன.

தமிழ் பேசும் மக்களின் நல் வாழ்விற்காக தன்உயிரை தியாகம் செய்த தியாகிகள் வரிசையில் அன்னை பூபதியும் இடம் பெற்று விட்டார்.

அன்னை பூபதி ஈழத்தமிழ் பேசும் மக்களின் விடுதலை போராட்ட வரலாற்றில் மட்டு மல்ல சர்வதேச ரீதியிலும் அழியாத இடத்தைப் பெற்று விட்டார்.

## தமிழினியவன்
(மட்டக்களப்பு செய்தியாளர்)

1939 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி மட்டக்களப்பு கறுவப்பன்கேணி என்னுமிடத்தில் சாதாரண குடும்பமொன்றில் பிறந்த அன்னை பூபதியின் கணவர் புகையிரத திணைக்களத்தில் ஊழியராக தற்போது ஓய்வூதியம் பெறுகிறார். அன்னை பூபதியின் உயிர்தியாகம் மூலம் அக்குடும்பம் இலட்சிய குடும்பமாக இன்று திகழ்கின்றது.

அன்னை பூபதிக்கு 4 பிள்ளைகள். இரு ஆண் பிள்ளைகள் ஸ்ரீலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரு பெண்பிள்ளைகள் திருமணமாகி விட்டனர். இரு பேரப்பிள்ளைகள் உண்டு.

சர்வதேச ரீதியில் உண்ணாவிரதபோரில் உயிர்த்தியாகம் செய்த 13 பேரில் அன்னை பூபதி 13 ஆவது இடம் வகித்தாலும் சர்வதேச ரீதியில் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவராவார்.

வட அயர்லாந்து கத்தோலிக்கப் புரொட்டஸ்தான் ஆதிக்கம், பிரித்தானிய அரசிடமிருந்தும் விடுதலைகோரி 19 .9 இல் போராட்டம் ஆரம்பித்தவர்.

இப்போராட்டத்தின் எதிரொலியாக கெரில்லா தலைவர்கள் பலர் பிரித்தானியா அரசினால் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையில் அரசியல் அந்தஸ்துத்கோரி சிறையில் பொபிசான்ட்ஸ் உண்ணாவிரதம் ஆரம்பித்து 17 ஆம் நாள் உயிர் இழந்தார். ஏனையோர் இப்போராட்டம் ஒருவர் பின்பு ஒருவராகத் தொடர்ந்து 7 மாதங்களில் மேலும் 10 பேர் உயிர்த்தியாகம் செய்தனர்.

எமது நாட்டில் சிலர் இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இடையில் கைவிட்டுள்ளார்கள் என்பது எமது கடந்தகால அரசியல் வரலாறுகள் காட்டுகின்றன.

ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் வந்த பின்பு இருவர் இப்போராட்டத்தில் ஈடுபட்டு தம் உயிரை தியாகம் செய்துள்ளார்கள் என்பதை தமிழ் பேசும் உலகம் மறந்துவிடவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் என தெரிவிக்கப்பட்டது. உண்மையில் பாதுகாப்பு வழங்கும் ஒப்பந்தமாக இருந்திருக்குமானால் இவ் இரு தியாகிகளை தமிழினம் இழந்திருக்கமாட்டாது.

மேலும் பல போராளிகள், இலட்சியவாதிகள், புத்திஜீவிகளை இழந்திருக்கமாட்டாது கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிந்திருக்கமாட்டாது.

★ அரசியல் கைதிகள் சகலரும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும்.

★ சிங்களக்குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்.

★ இடைக்கால அரசு அமையும் வரை மீளக்குடியமர்வு நிறுத்தப்படல் வேண்டும்.

★ பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படல் கூடாது.

★ வடகிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்காபடை முகாம்கள் வாபஸ் பெறப்படல் வேண்டும்.

மேற்படி 5 கோரிக்கைகள் முன்வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் போராளி திலீபன் செப்டம்பர் 15 இல் சாகும் வரை உண்ணாவிரத களத்தில் குதித்து 12 ஆம் நாள் உயிர்த்தியாகம் செய்தான்.

திலீபனின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டன.

பாதுகாக்க வந்ததாக கூறியவர்கள் பார்த்துக் கொண்டு நின்றார்கள். காரணம் அவர்களின் நோக்கம் தமிழின மக்களின் விடுதலை, பாதுகாப்பு அல்ல. தங்களின் நலனும் சுயநலபோக்கும்தான்.

தமிழ்பேசும் மக்கள் இந்திய படையின் வருகையால் தமது பாதுகாப்பு கிடைத்துவிட்டது என்ற மயக்கத்தில் இருந்தார்கள்.

போராளி திலீபன் மறைவு மூலம் மக்கள் மயக்கம் தெளிய ஆரம்பித்தது. குமரப்பா, புலேந்திரன் உட்பட 11 போராளிகள் உயிர்த்தியாகம் மூலம் மயக்கம் முற்றாக தெளியவைக்கப்பட்டது.

இந்நிலையில் அமைதியற்ற சூழ்நிலை உருவாகியது. தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களை பாதுகாக்க கூடியவர்கள் என்பதை தமிழ் பேசும் மக்கள் புரிந்துவிட்டார்கள்.

எமது பாதுகாப்பு எம்மால் தான் உறுதிப்படுத்திக்கொள்ளமுடியும். என்ற உறுதிப்பாடு மக்களிடம் அழியாத இடத்தைப் பிடித்துவிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்தியபடை ஆயுதகளைவு என்ற போர்வையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இதனால் தமிழ் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் ஏராளம்.

இந்நிலையில்தான் அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதற்காக மட்டக்களப்பில் அன்னையர் முன்னணியினால் 1988 பெப்ரவரி 13ஆம் திகதி இரு அம்சக் கோரிக்கை ஒருவார கால அவகாசத்துடன் சுழற்சி முறை உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்திய அரசு இதனை ஏற்க மறுத்துவிட்டது. ஒரு வார கால அவகாசம் முடிந்துவிட்டது.

19ஆம் திகதி திருமதி அன்னம்மா டேவிட், திரு. நேசம்மா வடிவேல் ஆகியோர் சாகும் வரையிலான உண்ணாவிரத களத்தில் குதித்தனர்.

மார்ச் 3ஆம் திகதி 15ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதன் பிரகாரம் நேசம்மா வடிவேல் வாபஸ் பெற்றார், அன்னம்மா டேவிட் தொடர்ந்தார்.

அன்னம்மா டேவிட் நிலை கவலைக்கிடமாக இருந்தது. பிரஜைகள் குழு, காந்திசேவா சங்கம், தொழிற் சங்க சம்மேளனம் போன்றன இப்போராட்டம் நியாயமானது ஏற்றுக்கொள்ளுங்கள் என இந்திய அரசை வற்புறுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஏற்றுக்கொள்ளாமல் மாசு கற்பிக்க முயன்றது.

இப்போராட்டத்திற்கு ஆதரவாக பல்வேறு மாணவர்கள் இணைந்து மார்ச் 11ஆம் திகதி நகரில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் அந்நிய படைகளால் தடுத்து நிறுத்தப்பட்டது.

14ஆம் திகதி பல்வேறு அமைப்புகள் ஆரையம்பதியிலிருந்து மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்வரை ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலம் மஞ்சந்தொடுவாய் முகாம் முன்பு கண்ணீர்புகை, குண்டாந்தடி பிரயோகம் செய்யப்பட்டு கலைக்கப்பட்டன.

17ஆம் திகதி பேச்சுவார்த்தைக்காக அழைக்கப்பட்ட அன்னையர் முன்னணி பிரமுகர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

அனறையதினம் பிள்ளைகள் தாயை காப்பாற்றுமாறு புகார் செய்தார்கள் என்று படுக்கையில் கிடந்த டேவிட் அன்னம்மாவை பலவந்தமாக தூக்கி சென்றனர் அந்நியப் படையினர்.

18ஆம் திகதி இந்திய படையினர், அதிகாரிகளின் மேற்படி செயலை கண்டிப்பதற்காக மாவட்டம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தியப் படையினர் ஊர்வலம் ஹர்த்தால் போன்ற சாத்வீக போராட்டங்களுக்கு தடைவிதித்தனர்.

அன்னையர் முன்னணியினர் தடையை மீறினர். டேவிட் அன்னம்மா இருந்த மேடையில் தமது கண்டனம் எதிர்ப்பு தெரிவிப்பதாக உறுப்பினர்கள் ஐவர் அன்றைய தினம் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

திருமதி கே. ஓஸ்ரா, திருமதி ஜே. பவளராணி, திருமதி கே. பொன்னுத்துரை, திருமதி ஜி. சொர்ணம்மா ஆகியோருடன் 5ஆவது பெண்மணிதான் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை.

நன்றி: எ.ழநாதம்

நால்வரும் தமது ஒரு நாள் அடையாள 'உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள அன்னை பூபதி தான் ''இலட்சியம், கோரிக்கை நிறைவு பெறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன்'' என உறுதி கொண்டார்.

கணவன், பிள்ளைகள் குடும்ப உறுப்பினர்கள் எவரும் குறுக்கீடு செய்யப் போவதில்லை என சமாதான நீதிபதி முன்னிலையில் சத்தியக் கடதாசி கொடுத்துவிட்டு மார்ச் 19இல் தன் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தார் ஏப்ரல் 19இல் தன் இலட்சியம் நிறைவு பெறாத நிலையில் உயிர் தியாகம் மூலம் வீர சுவர்க்கம் அடைந்தார்.

தமிழ் மக்கள் அமைதியும் நல்வாழ்வுக்காகவும்உயிர்தியாகம் செய்த அன்னை பூபதியின் தியாகம் தமிழ் சமுதாயம் இருக்கும் வரை மறக்க முடியாது.

அன்னை பூபதி இன்று சர்வதேசரீதியில் மறக்க முடியாத இடத்திலுள்ளார்.

சாத்விகத்தின் அன்னையாக விளங்குகிறார்.

---


## ஜோதிட பலன்கள்

உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தை முன்கூட்டியே அறிய விரும்புகிறீர்களா?

+ சாதகம் எழுதவும் + பொருத்தம் பார்க்கவும்

+ கைரேகை பார்க்கவும் + கிரக நிலைகளைத் தெரிந்து

அதன்படி உங்கள் வாழ்வை அமைக்க

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

**R.K.Moorthy**

74,ST.George Road, Upton Park, London E7 Phone: 081 470 0401


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொல்லான் புலால் மறுத்தானை

சக்தி வேல்

# எல்லா உயிரும் கைகூப்பித் தொழும்

இதனை எமது திருவள்ளுவர் என்றே கூறியிருந்தார். அது நமக்குப் பயன்படவில்லை. இன்றைய நாகரீக உலகமோ உயிர்க்கொலையைத் தனது தலையாய கடமை என்று கருதிவிட்டதுபோலும். எனவே உயிர்க்கொலையை தடுத்தல் எவ்வளவு தூரம் மிக மிக அத்தியாவசியமானது என்பதனை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் ஆராய்வும், நோக்கமுமாகும். உலகத்தைச் சரியான வழியில் நடத்த முயல்கின்ற பல்வேறு சமயங்கள் இவைபற்றி என்ன கூறுகின்றன என்பதனை முதலில் ஆராய்வோம்.

| மதம் | இறைவன் | திருநாமம் |
|---|---|---|
| ஜகோவாவின் சாட்சிகள். | பகவான் | ஜகோவா |
| இஸ்லாம் | ஆண்டவன் | அல்லா |
| கிறிஸ்துவம் | கடவுள் | பரமபிதா |
| பௌத்தம் | ஈஸ்வரன் | |
| யூதமதம் | ஆதிமூலதேவன் | |
| இந்துமதம் | இன்னும் பல | |
| வைணவம் | சொல்லலாம் | கிருஷ்ணர் |
| சைவம் | | சிவபெருமான் |




ஒரு குடும்பத்தவர் எவ்வாறு பலவித உறவு முறைகளை வைத்து ஒருவரை வெவ்வேறு விதமாக உரிமை கொண்டாடுகிறார்களோ அதே போலவே வெவ்வேறு மதத்தவர்களும் இறைவனுக்கு, தங்களுக்குப் பிடித்தமான பெயரைவைத்து தங்களுடைய உரிமையை உறவை இறைவனுடன் வியாபிக்கிறார்கள். இறைவன் இரக்கம் கொண்டவனாக பெருங்கருணை உடையவனாக இருக்கிறானே தவிர அவன் கொலைகாரனாக இருக்கவில்லை.

ஒரு உயிரை ஆக்குபவனுக்கு மட்டும்தான் அதனை அழிக்கும் உரிமை உண்டு. எனவே நாம் ஒருபோதும் கடவுளின் உரிமையைப் பறிக்கக்கூடாது. அதாவது இறைவன் படைத்த உயிரை அழிப்பதற்கு எமக்கு ஒருவிதமான அதிகாரமும் கிடையாது. இதனால்தான் போலும் உயிர்க்கொலையை எந்தவொரு சமயமும் அனுமதிக்கவில்லை. உண்மை நிலை இவ்வாறு இருந்த போதும் மக்கள் பலவிதமான மாறுபட்ட குதர்க்க விவாதங்களை முன்வைத்து முரண்பாடான முடிவுகளை ஒருபக்கச் சார்பாக எடுத்து விவாதிக்கிறார்கள். இவர்களுடைய விவாதம் எவ்வளவுதூரம் சரிஎன்று இப்போது நாம் ஆராய்வோம்.

முதலில் "ஜகோவாவின் சாட்சிகள்" என்ற மதத்தை கவனிப்போம். இம் மதத்தவர்கள் இறைவனை "ஜகோவா" என்று அன்புடன் அழைக்கிறார்கள். இம்மதத்தின் புனித நூல் NEW WORLD TRANSLATION OF THE HOLY SCRIPTURES. எனவே ஜகோவா என்ன சொல்லியுள்ளார் என்பதனைச் சற்றுக் கவனிப்போம்.

இதன்படி ஜெகோவா உலகத்தைப் படைத்தார். பின்பு மனிதனைப் படைத்தார். அவனுக்கு உதவியாக இருக்கும் வகையில் உதவியாளராக சகல ஜீவராசிகளையும் படைத்து இறுதியாக மனிதனது விலா எலும்பில் இருந்து பெண்ணையும் படைத்தார். –GE 2:18, 19, 20, 22.

மனிதனுக்கு உதவியாளராக தான் பெண்களும், மற்றைய உயிரினங்களும் ஜகோவாவினால் படைக்கப்பட்டது, என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. எனவே உதவியாளராவுள்ள ஒரு உயிரை எமது வயிற்றுப்பசிக்கு எவ்வாறு இரையாக்க முடியும் என்ற சந்தேகமும் கூடவே எழுகின்றது. இச்சந்தேகத்தை மேலும் அதிகரிக்கும் வண்ணம் ஜகோவா கடவுளின் ஆரம்ப உரையும் அமைந்துள்ளது.

ஜகோவா கடவுள் சொல்கிறார், நான் விதைகளையும், பழங்களைத் தரும் ஒவ்வொரு மரத்தையும், எல்லா தாவர வகைகளையும் இங்கே நான் உங்களுக்குத் தந்துள்ளேன். இவைகள் உணவாக உங்களுக்குப் பயன்படட்டும். (GE 1:29)

எனவே புனித நூலை ஆரம்பிக்கும் போதே அதன் முதலத்தியாயத்தில் சைவ உணவை உண்ணச் சொல்கிறார் ஜகோவா.

இறைவன் மனிதனைப் படைக்கும் போதும் சரி, மனிதனைப் படைத்த பின்பும் சரி, அவரது திருவுள்ளத்தில் தாவர உணவைத்தான் மனிதன் உண்ண வேண்டும் என்ற மன உறுதி இருந்துள்ளது என்பதனை நாம் இங்கு உணரக்கூடியதாக உள்ளது. எல்லாம் தெரிந்த எல்லாம் வல்ல ஜகோவா கடவுள் தம்முடைய நோக்கத்தில் ஒரு நாளும் பிழை விட மாட்டார். மேலும் ஜகோவாவினால் படைக்கப்பட்ட முதல் மனிதனாகிய அடம் (ADAM) என்பவரிற்கு ஜகோவா பின்வருமாறு சொல்லியுள்ளார்.

"நீ கட்டாயமாகத் தாவர உணவைத்தான் உண்ண வேண்டும்." –GE 3:18)

---

### காலங்கள்

காலங்களே தருகின்றன. அவைகளே பறிக்கின்றன. காலங்களே சிரிக்கச் செய்கின்றன. அவையே அழவும் வைக்கின்றன. காலம் பார்த்துக் காரியம் பூமியையே விலைக்கு வாங்கலாம். காலங்களிலேயே காரியங்களின் வெற்றி தோல்விகள் அடங்கி இருக்கின்றன.

–கவியரசு கண்ணதாசன்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே ஜகோவா தான் படைத்த முதல் மனிதனை (அதாவது அந்தத் தூய்மையான உயிரை, பல மடங்கு எங்களிலும் பார்க்க உயர்ந்த அந்த மேலான மனிதராகிய அடம் என்பவரை) சைவமாக இருக்கும்படி வற்புறுத்தியுள்ளார். காலப்போக்கில் பூமியில் வன்முறைகள் அதிகரித்தன. இதனுலுருவான இரத்தக்களரியும் இறைச்சிகளும் பூமியைப் பழுதாக்கத் தொடங்கின. அப்போது ஜகோவா தன்னுடைய கட்டளைப்படி நடக்கும் நோவா (NOVA) என்ற பக்தனிடம் ஒவ்வொரு இன உயிரினத்திலும் ஒரு சோடியை (ஆண்-பெண்) மட்டும் பாதுகாக்கச் சொல்லி விட்டு வெள்ளப் பெருக்கால் சகல சீவராசிகளையும் அழித்தார். இதன் பின்பு நோவாவுடன் இருந்த உயிரினங்கள் பெருகி புதிய உலகம் உருவானது.

இப்புதிய உலகத்தில் மக்கள் கமம் செய்து வாழ்ந்தார்கள். -GE 9:20,31:54,37:25. குழந்தைகளுக்குப் பால் தரும் கால் நடைகளைப் பாதுகாத்து வைத்திருந்தனர். -GE 33:13. ஒரு கால கட்டத்தில் உணவுப் பஞ்சம் உண்டான போதும் மக்கள் தானியங்களிற்காக எகிப்திற்கு வந்தார்கள் -GE 41:57 காலப்போக்கில் பஞ்சம் அதிகரித்து வாட்டியது-GE 42:2 வயிற்றுப் பசியைப் போக்கத் தங்கள் கால்நடைகள் வீடு, நிலம் முதலியவற்றை விற்றுப் பாண் வாங்கி உண்டார்கள். -GE 47:16 இதன் பின்பு குத்தகைக்கு கமம் செய்தார்கள். தங்கள் உயிர் காப்பாற்றப்பட்டதற்கு நன்றியாக அவர்கள் அடிமைகளாக இருக்கப் பிரியப்பட்டார்கள். -GE 47:25 ஜகோவா, மோசசிற்குச் சொன்னுர் உனது வாழ்க்கை முழுவதும் நீ நொதிக்காத கேக்கைத் தான் உண்ணவேண்டும். -EX 12:20 ஒரு கட்டத்தில் ஜகோவா சொர்க்கத்தில் இருந்து பாணை மழையாகப் பொழிந்தார். மக்களுக்கு உணவு கொடுப்பதற்காக -EX 16:4 அதுமட்டுமல்ல தனக்கு மக்கள் தானியங்களையும், பழங்களையும் படைப்பதற்குப் பயன்படுத்தலாம் என்றும் ஜகோவா கூறியுள்ளார். -LEV 2:4

எனவே ஜகோவா கடவுள் சொன்னவற்றை அலசி ஆராயுங்கள். இதிலிருந்து மனிதனுகப் பிறந்த சகல ஆத்மாக்களும் சைவமாக இருந்து சைவ உணவை மட்டுமே உண்ணவேண்டும் என்பது தெரிகிறது. ஜகோவா இதனைப் பல இடங்களில் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளார். மனிதனுக்கு உதவுவதற்காக படைக்கப்பட்ட சகல சீவராசிகளையும், பெண்களையும் கொன்று நாம் பிணந்தின்னிகளாக மாறவேண்டியதில்லை. மண்புழு மண்ணைக் கிழறுகின்றது. சிங்கம் மானைக் கொல்லுவதன் வாயிலாக (தாவரங்கள் அதிகமாகச் சேதப்படுத்தப்படுவதனை தடுக்கின்றது) மானின் தொகைப் பெருக்கம் கட்டுப்பாட்டுள் வைக்கப்படுகின்றது. எனவே உயிரினங்கள் மனிதனுக்கு உதவும் அதேவேளை அவற்றின் இயற்கைச் சமநிலை மாறுது காப்பாற்றப்படவும் ஜகோவா வழி செய்துள்ளார். எனவே மனிதனுடைய தலையீடு அங்கே தேவையில்லை.

## புலால் உணவு

உயிருடன் உள்ள சகல நகரும் விலங்கினங்களும் உணவாகப் பயன்படுத்தமுடியும். -GE 9:3 இதனை அனுமதித்த அதேவேளை அதற்கு தடைகளையும் ஜகோவா போட்டார். எனவேதான் ஆத்மாவைக் கொண்ட இறைச்சி, இரத்தத்துடன் சேர்ந்த இறைச்சி ஆகியவற்றை நீ உட்கொள்ளக்கூடாது -GE 9:4 நீ கொழுப்பையோ, இரத்தத்தையோ உண்ணக்கூடாது என்று ஜகோவா மோசசிடம் சொல்லி அதனை இஸ்ரேல் மக்களிற்கு தெரிவிக்கும்படி சொன்னுர் LEV 3:17 இரத்தம் உள்ள உணவைக் கடைசிவரை உண்ணக்கூடாது. -LEV 7:26.

மேற்படி ஜகோவா கூறியவற்றை சற்று கவனிப்போம். உயிருடன் உள்ள மிருகங்களைக் கொன்று தின்ன அனுமதித்த போதும் நாம் எல்லா மிருகங்களையும் உண்பதில்லை. எனவே இங்கு வேறுபாடு காணும் நிலை எழுகின்றது. அதாவது முளையைப் பாவிக்கின்றோம். உயிருள்ளவற்றையும், இரத்தத்துடன் சேர்ந்த இறைச்சியையும் உண்பதினை ஜகோவா தடுத்துள்ளார். அதாவது புலால் உண்ண அனுமதித்ததுடன் அதனைத் தடுக்கும் சட்டத்தையும் கூறியுள்ளார். ஆகவே ஜகோவா எம்மை மடையர் முடர் என்று எண்ணியுள்ளாரா? இல்லை. ஏனெனில் நாம் சிந்திக்க அவர் முளையையும், சரியாக வழிநடக்க புனிதநூலையும் தந்துள்ளார். எனவே ஜகோவா தந்த அறிவை இங்கே நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். நமது அறியாமையால் எத்தனையோ பிழைகள் செய்கின்றோம். இவற்றை ஜகோவா மன்னிப்பார். நாம் ஆட்டை வெட்டி அதன் இரத்தத்தை வெளியே ஓ விட்டு உண்ண முயலலாம். ஆயினும் நமது அறிவு (தற்கால விஞ்ஞான) அல்லது அனுபவம் எமக்கு நன்றாக உணர்த்துகின்றது, நாம் செய்வது தவறு என்பதனை. இறைச்சியிலிருந்து இரத்தத்தை ஒரு நாளும் முற்றாக நீக்கமுடியாது. காரணம் குருதிமயிர்க்குழாய்களில் உள்ள இரத்தம்தான் இறைச்சிக்குச் சிவப்பு நிறத்தைக் கொடுக்கிறது அதேவேளை கொழுப்பைத் தின்னக்கூடாது. இறைச்சியில் உள்ள எலும்பை முறிக்கக்கூடாது. என்றும் கூறியுள்ளார். இதனுல் நாம் புலால் உண்ணலாமா? என்று எமது மனசாட்சியைத் தட்டிக் கேட்கவேண்டும். மக்களின் அறிவிற்கேற்ப ஆண்டவன் போதிக்கின்றுன், அதாவது ஆடுகின்ற மாட்டை ஆடிக் கறக்கனும், பாடுகின்ற மாட்டைப் பாடிக் கறக்கனும் என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே ஜகோவா மாமிசம் உண்பதனை உண்மையில் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. இதனை விவாதிப்பதற்காக சிலர் யாகப்பலியிடுதலை ஒரு காரணமாகக் காட்ட முயலலாம். எனவே இதனையும் சற்று ஆராய்வோம்.

## யாகப்பலி

ஒவ்வொரு வருடத் தொடக்கத்தில் வரும் முதல் மாதத்தில் 10ம் நாள் ஒவ்வொருவரும் ஒரு செம்மறி ஆட்டை அதுவும் ஒரு வயதுடைய ஆண் செம்மறி ஆடு அல்லது மலைச்சாதி இன ஆட்டைத் தங்கள் பாதுகாப்பில் 14 நாட்களுக்கு வைத்திருந்து இரு மாலைப் பொழுதிற்கிடையே பலியிடவேண்டும். -EX 12:

இங்கு பலி என்ற பெயரால் கொலை வெறியாட்டம் நடத்த இறைவன் ஒருபோதும் அனுமதிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தான் அவர் பலியிடுவதற்கு 365 நாட்களுள்ள ஒரு வருடத்தில் ஒரேயொரு நாளை மட்டும் அனுமதித்தார். மேலும் அந்த நாளில் கூட உயிர்களைப் பாதுகாக்க ஜகோவா திருவுளங்கொண்டார். இதனால் தான் அவர் ஒரு வயதுடைய ஆடு என்று முதல் தடையைப் போட்டார். எனவே ஒரு வயது என்பதனை முதலில் சரியாக அறிய வேண்டும். அத்தகைய ஆட்டுக்குட்டி கிடைத்தாலும் அது எந்தவித நோயும் அற்றதாக இருக்க வேண்டும். இது அடுத்த தடை. எத்தகைய உடல் அங்கக்குறைபாடோ, அல்லது உடல் ஊனமோ இருக்கக்கூடாது. இது 3வது தடை. மேலும் உடலில் ஒருவிதமான வடுவோ, காயங்களோ, தழும்போ இருக்கக்கூடாது. (LEV 22:21)

ஆகவே இத்தகைய தடைகளைத் தாண்டி ஒரு உயிரைப் பலி கொடுப்பது மிகக் கடினமான செயலாக இருக்கும். இன்றைய நாகரீக உலகத்தில் சில வேளை இவை அவ்வளவு கடினமான செயலாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனால் ஜகோவா இதனைச் சொன்ன போது வாழ்ந்த மக்கள் இன்றைய விஞ்ஞான முறை வாழ்க்கையை வாழவில்லை. ஆகவே மேற்குறிப்பிட்ட தடைகளை தாண்டுவதும் அவ்வளவு சுலபமான முறையாக இருக்க முடியாது. இத்தனை தடைகளையும் ஜகோவா விதித்தது உயிர்க்கொலையைத் தடுப்பதற்கு என்பது சற்றுச் சிந்தித்தால் நமக்குப் புலனாகும். அது மட்டுமல்ல, இந்த யாகப்பலி எகிப்தில் மட்டுமே செய்ய அனுமதித்தார்.

தானியங்களை எண்ணெய் விட்டு எரித்துப் புகைக்கலாம். அல்லது அரைத்த மாவை வட்ட வடிவத்தில் செய்து தானியங்களைப் பயிரிடலாம். மேலும் பழங்களைக்கூட படையலாகப் படைக்கலாம். (LEV 2:4) யாகப்பலிக்கு மிருகங்களின் உயிரைக் கட்டாயம் பறிக்க வேண்டுமென்று ஜகோவா சொன்னதாக எவரும் வாதிட முடியாது, என்பது இதிலிருந்து எமக்குப் புலனாகிறது. மேலும் தானியங்களை மட்டும் வைத்து யாகப் பலியைப் பூர்த்தி செய்யலாம் என்பதும் வெளிப்படையாகின்றது. ஜகோவா கடவுள் எல்லாவற்றிற்கும் மேலாக பின்வருமாறு கூறியுள்ளார். "அக்கினியில் கொழுப்பைப் புகைப்பதனாலோ, அல்லது யாகத்தில் மிருகங்களைப் பலியிடுவதனாலோ, ஜகோவா கடவுள் மகிழ்ச்சியடைய மாட்டார். எனது கட்டளையை ஏற்று நடப்பதில் தான் நான் மகிழ்ச்சியடைவேன். (SAM1:22)

எனவே நாம், வேள்வி, யாகம், முதலியன கூட செய்ய வேண்டியதில்லை, என்கிறார் ஜகோவா.

அப்படி யாகம் செய்ய விரும்பினால் தானியங்கள் கொண்ட யாகத்தைச் செய்து முடிக்கலாம்.

எனவே ஜகோவாவை நேசிக்கும் ஒவ்வொருவரும் அவரது அன்புக் கட்டளையை ஏற்று நடக்க வேண்டும். அப்படி நடந்தால் அது ஜகோவாவிற்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். இதனால் உங்கள் வாழ்வு சுபீட்சமடையும். எனவே இனிமேலாதல் புலால் உண்பதை நிறுத்திக் கொள்ளுங்கள். சைவர்களாக இருந்து ஜகோவாவை வணங்குங்கள். உயிர்ப்பலி இடுதல், நெருப்பு யாகம் செய்தல், முதலிய எல்லாவற்றிலும் மிகச் சிறந்ததும் மேலானதும் என்னவென்றால் முழு மனத்துடனும் பரிபூரண விளக்கத்துடனும் ஜகோவாவை வணங்குவதும் ஜகோவாவை நேசிப்பதும் ஆகும். (MAR. 12:33)

| | | |
|---|---|---|
| GE - | GENESIS | ஜகோவா - JEHOVAH |
| EX - | EXODUS | அடம் - ADAM |
| LEV - | LEVITICUS | நோவா - NOAH |
| SAM - | SAMUEL | மோசஸ் - MOSES. |
| MAR. | MARK | |

அடுத்த இதழில் இஸ்லாம் மதமும், அவர்களுடைய புனித நூல் குர்ஆனும் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்.

## அதிஷ்டசாலியான விமானப் பயணி

கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொடுக்கும் என்பது சரிதான். மனைவியோடு விமானத்தில் இருந்து இறங்கிய பயணியை, விமான நிலையத்தில் வைத்து லுப்தான்ஸா விமான நிலையத் தலைவர் வரவேற்று ஒரு பரிசும் அளித்த போது அந்த ஜோடி ஆனந்த அதிர்ச்சியில் செய்வதறியாது திகைத்து நின்றது. ஏனிந்த ராஜ வரவேற்பு?

20 கோடி பயணிகள் தங்கள் விமானத்தில் பயணம் செய்து முடிக்கும் போது அந்தக் கடைசிப் பயணியைக் கௌரவிப்பது என்று மே. ஜேர்மன் விமான நிறுவனமான லுஃப்தான்ஸா தீர்மானித்திருந்தது. 25 வருட கால இடைவெளியில் வழக்கறிஞரான தனது நண்பரைச் சந்திக்கக் கி. ஜேர்மனியில் இருந்து மே. ஜேர்மனிக்குப் பயணமானார், இந்தக் கி. ஜேர்மன் வழக்கறிஞர். இவர் மனைவியையும் கூட அழைத்து வந்திருந்தார். விமானத்தில் இருந்து இறங்கியதும் இறங்காததுமாக மே. ஜேர்மனி முழுவதும் இலவசமாக விமானத்தில் சுற்றி வரலாம் என்று பரிசு ரிக்கட்டைக் கொடுத்திருக்கிறார்கள்.

## தாக்குதல்

நான் தாக்குதல்களை தாங்கிக் கொள்ளும் பழக்கமுடையவன் மாத்திரமல்ல, தாக்குதலை விரும்புகிறவனும் கூட. தாக்கப்பட்டால் தான் நானே கூட மெருகு பெற முடியும்

— கலைஞர் கருணாநிதி —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் SCIENCE & TECHNOLOGY

## நடைமுறைச் செய்திகள் CURRENT NEWS

### புகைபிடித்தலால் வரும் இறப்புகள்

அடுத்த அரைநூற்றாண்டில், உலகெங்கும் புகைப்பிடிப்பால் இறப்பவர் எண்ணிக்கை மூன்று மடங்காகும் எனவும் குறிப்பாக பின்தங்கிய நாடுகளில் இது கூடுதலாக நடைபெறும் எனவும் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

றிச்சட் பீற்ரோ (Richard Peto), என்பவர் உலகசுகாதார சங்கத்தின் புகையிலை சம்பந்தமான மனித பாதிப்புகள் பற்றிய ஆராய்ச்சிக் குளுவின் தலைவர் மேற்கு ஆஸ்ரேலியாவில் நடந்த புகையிலையும் சுகாதாரமும் (Tobacco and Health) என்பதுபற்றிய ஏழாவது உலக மகாநாட்டில் ஆற்றிய உரையில் தகவல்களை வெளியிட்டார். மேலும் இவர் தெரிவித்ததாவது, இவ்விறப்புக்கள் பெரும்பாலும் இன்று புகைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கும் இளம் சந்ததியினரிடையே நடைபெறும் எனவும் 200 மில்லியனுக்கும் அதிகமான இன்றைய இளம் பிள்ளைகள் இதனால் கொல்லப்படுவார்கள் எனவும் கூறினார்.

### இருதய நோயாளிகளுக்கு ஓர் எச்சரிக்கை

அமெரிக்காவிலுள்ள செயற்கை இருதய வால்வினைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்கள் அதனை வாங்குபவர்களுக்கு அதிலுள்ள ஆபத்துகளைப்பற்றி நோயாளிகளுக்கு சரிவர எச்சரிக்கை செய்யவேண்டுமென வாஷிங்டனிலுள்ள சுகாதார ஆராய்ச்சிக் குளுவினால் (Health Research Group) கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தக் குளுவின் ஆய்வுகளிலிருந்து பல உண்மைகள் தெரியவந்துள்ளன. அதாவது எல்லாமாக 80,000 நோயாளிகள் இந்த வால்வினைத் தமது உடம்பில் பொருத்திக்கொண்டார்கள். அதில் ஏறக்குறைய 400 பேரின் செயற்கை வால்வுகள் உடைந்துள்ளன. அவர்களில் 37 பேர் பிருத்தானியராவர். இவர்களுள் எல்லாமாக 2/3 பங்கு நோயாளிகள் இறந்துள்ளார்கள்.

### சனிக்கிரகப் பயணமும் ஐன்ஸ்ரைனின் சார்புத்துவமும்

1980ம் ஆண்டு வொயேஜர்-1 (Voyager) என்ற விண்வெளிக் கலம் சனிக்கிரகத்தைத் தாண்டிப் பயணம் செய்தபோது அக்கிரகத்தினைப்பற்றியும் அதன் சந்திரன்களைப்பற்றியும் படித்ததுடன் மேலும் பல விஞ்ஞானச் செய்திகளையும் தகவல்களையும் அனுப்பிவைத்துள்ளது. இவை ஐன்ஸ்ரைனின் பொதுச்சார்புத் தத்துவத்தை ஆதரிப்பதாக இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

1915ம் ஆண்டு ஐன்ஸ்ரைன் வெளியிட்ட தத்துவத்தின்படி, ஒளியானது புவியீர்ப்புக்கு எதிராகப் பயணஞ் செய்யும்போது சக்தியை இழக்க வேண்டும். இப்பாதிப்பு புவியீர்ப்பு சிவப்பு நகரல் (Gravitational Red Shift) என அழைக்கப்படும். ஒளியின் சக்தி குறையும்போது அதன் அதிர்வுப் பெறுமானம் (frequency) குறைகின்றது. இதனால் ஒளிநிறம் சிவப்பாகத் தோன்றுகின்றது.

வொயெஜர்-1 கலம் சனிக்கிரகத்தைத் தாண்டிச் செல்லும்போது இவ்விளைவைப் பரிசோதித்துப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் விஞ்ஞானிகளுக்குக் கிடைத்தது. அதாவது, 12ம் திகதி கார்த்திகை மாதம் 1980ம் ஆண்டு வொயெஜர்-1 ஆனது சனிக்கிரகத்தின் புவியீர்ப்பாதிக்கத்துள் நுழைந்து பின் வெளியேறும்போது அதிலிலுந்து பூமிக்கு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்த ரேடியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் SCIENCE & TECHNOLOGY

## நடைமுறைச் செய்திகள் CURRENT NEWS

அலையின் அதிர்வுநிலை 2.3 GHZ ல் இருந்து சிறிது குறைந்திருந்ததை விஞ்ஞானிகளால் அவதானிக்க முடிந்தது.

இவ்வாய்வில் ஈடுபட்டுள்ள க்றிஷர் (Krisher) என்பவர்தொடர்ந்துஆதாரங்கள் தேடி இப்போது வொயெஜர்-2 கலத்தின் தகவல்களைப் படித்துக் கொண்டிருக்கிறார்.

### ஆதிகால ஓவியர் மனித இரத்தத்தால் வரைந்தனர்

அவுஸ்ரேலியா, ராஸ்மேனியா நாடுகளைச் சேர்ந்த ஆதிகால மனிதர் குகைச் சித்திரங்களை மனித இரத்தத்தைக் கொண்டு வரைந்ததற்கான ஆதாரங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளார்கள். அவுஸ்ரேலியாவில் இரு குகைகளிலும் ராஸ்மேனியாவில் இரு குகைகளிலுமிருந்து இவற்றிற்கான ஆதாரங்களைத் திரட்டியிருக்கிறார்கள். அவுஸ்ரேலியாவைச் சேர்ந்தவை 20,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகவும் ராஸ்மேனியாவிலுள்ளவை 10,000ற்கும் 11,000ற்கும் முற்பட்டதாகவும் தெரிகின்றது. ரேடியோ காபன் திகதியீட்டு (Radio Carbon Dating) முறையைக்கொண்டு அவுஸ்ரேலியாவின் கானபெரா என்ற இடத்தைச் சேர்ந்த பல்கலைக்கழகத்தார் செய்த ஆய்வுகளில் இந்தக் கண்டுபிடிப்புகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

### கோம்பக் டிஸ்க்கில் நவீன முறையில் வீடியோ படப் பதிவு

ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த பிலிப்ஸ் என்ற பெரிய இலத்திரனியற் கருவி உற்பத்தியாளர், அன்மையில் அசையும் 72 நிமிட வீடியோ படத்தினை கொம்பக் டிஸ்க்கில் டிஜிடல் முறையில் சேமித்து பின்னால் அவற்றை நடைமுறையில் வீடியோவிலும் போட்டுக் காட்டினார்கள்.

இதுவரை காலத்திலும் கொம்பாக் டிஸ்க்கினைப் பாவித்து டிஜிடல் முறையில் வீடியோ படம் காட்டுவதில் பல இடர்பாடுகள் இருந்தன. குறிப்பாக சேர்த்துவைத்த தகவல்களை வெளியில் எடுக்கும் வேகம் மிகமிகக் குறைவாக இருந்ததால் நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய வகையில் இத் தொழில் நுட்பம் வளர்ந்திருக்கவில்லை. இன்று இக்குறைபாட்டிற்கும் மற்றும் பல தொழில்நுற்பப் பிரச்சனைகளுக்கும் பிலிப்ஸ் ஆய்வுக் குளுவினர் தீர்வுகள் கண்டுள்ளார்கள்.

அண்மையில் இவர்களால் காட்டப்பட்டது முழுமையான அசையும் படமாகும் (CDI.FMV/CDI). இது 72 நிமிட படத்தை, 12செ.மீ. டிஸ்க்கில் ஒலியுடன் பதிவு செய்ய வல்லது. முழுமையான அசையும் படத் (Full Motion Video) தகவல்களை குறுக்குவதன் மூலம் முறையில் வீடியோ படங்களை வெற்றிகரமாக கொம்பக் டிஸ்க்கில் போடமுடிந்துள்ளது. வழக்கமாக வீடியோ படமுறையில் ஒரு செக்கனுக்கு, ஐரோப்பாவில் 25 படங்களும், அமெரிக்கா, ஜப்பானில் 30 படங்களும் காட்டப்படும். இப் படங்கள் கூட்டபடுவதற்கு முன் அவை டிஜிடல் முறைக்கு (Digital code) மாற்றப்பட வேண்டும். ஆனால் ஒன்றுவிட்ட ஒரு படங்களே இவ்வாறு மாற்றப்பட வேண்டும். மேலும் ஒன்று விட்டு ஒன்றாக வரும் படங்களின் மத்தியிலும் அவற்றை அப்படியே சேமிப்பதற்குப் பதிலாக அவற்றுக்கிடையே உள்ள வேறுபாட்டை மட்டுமே பதிவு செய்யப்படுகின்றது. இதனால் CD-ROM ல் பதிவு செய்யப்பட வேண்டிய படங்களின் அளவு பெருமளவில் குறைக்கப்படுகின்றது. இதனால் தகவல்களைப் பரிமாறும் வேகம் 144 - 150kb ல் இருந்து 20kb ஆகக் குறைந்துள்ளது.

(தொடரும்..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தக்கறை படிந்த சீருடைகள்

சீர்மாறன்

தாதிகளின் விடுதியில் நேற்றிரவும் பெரும் சர்ச்சை. இந்தக்கேள்வி முன்பும் அடிக்கடி எழுந்ததுண்டு. ஆனல் இந்த இரண்டு மாத ஓய்வுக்குப் பின் மீண்டும் அதே கேள்வி! அதே சர்ச்சை!

"பாதுகாப்பில்லாமல் எப்படி வேலை செய்வது?"

"பாதுகாப்புத் தேடி நாமே கடமைக்குப் போக மறுத்தால்..குற்றுயிராக வரும் நோயாளிகளை யார் காப்பாற்றுவது?"

"எமது உயிரே ஊசலாடும்போது மற்றவர்களின் உயிரை எப்படிக் காப்பாற்றுவது?"

"எம்மை நம்பி வருபவர்களை சாகவிட்டு விட்டு பின்பு யாருக்கு இந்த சேவை?"

"எல்லோரும் செத்து மடிந்த பின்பு நாம் மட்டும் எப்படி உயிர் வாழ்வது?"

இப்படி அடிக்கடி தர்க்கங்கள் நடக்கும். இறுதியில் வடிவுக்கரசி போல் எல்லோரும் கடமைக்குத்தான் செல்வார்கள்.

இந்தப்பத்து நாட்களாக ஆங்காங்கே 'செல்லும், 'குண்டுகளும் பொழிந்த இராணுவத்தின் அராஜகம், நெருங்கி, நெருங்கி, ஆஸ்பத்திரி என்னும் பாராமல் இன்று காலை இங்கேயும் செல் அடித்தது.

காலை 6 மணிக்கே மெயின் வீதியின் ஓரமாக இருந்த தாதிகளின் விடுதியில் செல் விழுந்து வெடித்தது. கூரை தரையிறங்கியது.

நல்ல வேளை மாணவ தாதிகள் கீழ்மாடியில் தங்கியிருந்ததால் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். "இது தவறுதலாக ஏவப்பட்டதல்ல. குறி பார்த்துத்தான்...இன்று உங்களை ஒருகை பார்க்கிறோம்.' என்பது போல் தொடர்ந்தும் ஆஸ்பத்திரியைச் சுற்றி, செல்களும் குண்டுகளும் வந்து வீழ்ந்து கொண்டிருந்தன.

கைகளையிழந்தவர்களும் கால்களையிழந்தவர்களும் குழந்தைகள், வயோதிபர்கள், பெண்டிர்கள், தாய்மார்கள் என்று இந்தப் பத்து நாட்களாக அம்புலன்ஸிலும், சைக்கிளிலும், நடையிலும், மாட்டு வண்டிலிலும், அகப்பட்ட வாகனங்களிலும் உறவினர்களும் தெரிந்தவர்களும் சிகிச்சைக்காகவும் உயிரைக்காப்பாற்றவும் ..ஆஸ்பத்திரியின் சத்திர சிகிச்சைப்பிரிவு நிரம்பி வழிந்தது. கிலி கொண்ட உறவினர்களும் உயிருக்குப் பயந்து ஆஸ்பத்திரிக்குள் தஞ்சம் புகுந்தார்கள். வழமையாக எழுநூறு படுக்கைகளைக் கொண்ட நோயாளிகளும் தாதிகளும் ஊழியர்களும் டாக்டர்களும் இருக்கின்ற ஆஸ்பத்திரிக்குள் இப்போது ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தஞ்சம் புகுந்திருந்தார்கள்.

வடிவுக்கரசி பம்பரம் போல் சுழன்று சுழன்று அரைகுறையாகவும் குற்றுயிராக [illegible] வந்து கொண்டிருக்கின்ற புதுநோயாளிகளை[illegible], ஏற்கனவே இந்த வார்டில் நிறைந்து போயிருக்கிற கடுமையான நோயாளிகளையும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

இன்று காலை ஆறு மணிக்குத் தாதிகள் விடுதியில் விழுந்த ஷெல்லுடன் ஆஸ்பத்திரியே சலசலத்தது. பீதிகொண்டு உறவினர்களும் நோயாளிகளும் அங்குமிங்கும் ஆஸ்பத்திரிக்குள்ளேயே பாதுகாப்பான கட்டிடங்களைத் தேடித் தங்கள் கூடாரத்திற்கு ஓடி ஒளிந்தார்கள். வடிவுக்கரசி மனத்தின் உறுதியுடன் மற்றவர்களுக்கும் தைரியமூட்டினாள். பதட்டத்தைத் தணித்தாள்.

ஆனல் அவையெல்லாம் பொடிப்பொடியாகுவது போல் -எட்டரை மணியிருக்கும்.

தலையில் இடி விழுந்தது போல் 'பும்' என்று பக்கத்தில் உள்ள 8ம் வாட்டில் இன்னொரு செல் விழுந்து வெடித்தது.

கூரை இடிந்து விழுந்து மூன்று நோயாளிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்கள். உயிர் காக்கப்படுமென்று அரைகுறை உயிருடன் நம்பி எங்கே வந்தார்களோ அங்கேயே அவர்கள் உயிர்கள் முற்றாகப் பறிக்கப்பட்டது. நாற்பதுக்கும் மேற்பட்ட நோயாளிகள் காயமடைந்தார்கள்.

வடிவுக்கரசி வேலை பார்க்கும் இந்த ஒன்பதாம் வாட்டுத்தான்இந்த ஆஸ்பத்திரிக்குள்ளேயே பழைமை வாய்ந்ததும் பழைய கட்டடமுமாகும். சிமெந்துக் கூரையில்லாமல் வெறும் ஓடுகளால் மாத்திரம் வேயப்பட்ட கூரையைக் கொண்டது. இனியும் வடிவுக்கரசியின் உறுதியையும் நம்பிக்கையையும் நோயாளிகள் செவிமடுக்கத் தயாரில்லை. வடிவுக்கரசியின் மனத்தில் "ஆஸ்பத்திரிக்குள் ஒன்றும் நடக்காது என்று இதுவரையில் இருந்து வந்த நம்பிக்கையும் உறுதியும் ஷெல் வெடித்து சிதறியது போல் பொடிப்பொடியாகியது. கை கால்கள் நடுங்கியது. ஆனாலும் கிலிகொண்டு, சித்தப்பிரமை பிடித்து உயிருக்குப்பயந்து சேலைன் குழாய்களையும் குருதிக் குழாய்களையும் ஊன்றுகோல்களையும் பிடுங்கி எறிந்து கொண்டு எழும்பவும் முடியாமல் நடக்கவும் முடியாமல் நோயாளிகள் படுகிற அவஸ்தையைப் பார்க்க மனங்கலங்கியது. முதன் முறையாகக் கண்கள் கலங்கி அழுதாள்.

உலகில் வேறெங்குமே ஒரு ஆஸ்பத்திரியில் இவ்வளவு அவலமும் கேவலமும் நடந்திருக்காது. அவதிப்படுகின்ற நோயாளிகளுக்கு உதவி செய்து பாதுகாப்பான மற்றைய வாட்டுகளுக்கு இடம் மாற்றினாள். "கடவுள் அனுப்பியிருக்கிற தேவதை" என்று நோயாளிகளும் உறவினர்களும் மனசார வாழ்த்தினார்கள்.

-2-

ஷெல்லினுடைய தாக்க[illegible] அடிக்கப்படுகின்ற ஷெல்லின் சக்தியையும் வலு[illegible]யும் பொறுத்தது. சில ஷெல்கள் வானத்திலே[illegible] வெடித்து சத்தம் எழுப்பி கிலி கொள்ளச் செய்வதோடு சரி. சிலது கள் கூரையைப்பிய்க்கு[illegible] ஆனால் மிகவும் சக்தி வாய்ந்தவை முழுக் கட்டடத்தையும் இடித்து விடும்.

ஷெல் எந்தப்பக்கத்திலிருந்து வருமென்பது தெரியாததால் சிமெந்து பிளேட்டாலான கூரையுள்ள கட்டிடத்திற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சம் புகுந்தால் உயிர் தப்பலாம் என்றொரு நம்பிக்கை. உண்மையுங்கூட.

நோயாளிகள், உறவினர்கள் தாதிகள், ஊழியர்கள், டாக்டர்கள் எல்லோரும் இரண்டாவது ஷெல்லும் ஆஸ்பத்திரிக்குள் விழுந்ததும் மனம் சோர்ந்து நம்பிக்கையிழந்து பீதி அடைந்தார்கள். செயலிழந்தார்கள்.

இரண்டு பக்க வாட்டுக்களையும் இணைக்கின்ற நிர்வாகக் கட்டிடத்திற்கு மேல்தான் வைத்தியர்களின் விடுதியிருக்கிறது. இடையினிலிருக்கின்ற சிமெந்துக் கூரையின் நிமித்தம் அனைவருமே இந்தக் கட்டிடத்திற்குள் தஞ்சம் புகுந்தார்கள்.

தன்னுடைய வாட்டிலிருந்த அத்தனை நோயாளிகளையும் அக்கம்பக்கம் வாட்டுகளுக்கு அப்புறப்படுத்தி அவரவர்க்குச் செய்யவேண்டியதைச் செய்து முடிக்கவே மணி மூன்றரையாகி விட்டது. களைப்பின்றி மனச்சோர்வுமின்றி கோப்பி தண்ணி கூடக் குடிக்காமல் ஒரு தாதிக்கும் மேலான சேவையைச் செய்கிற இவளைப் பார்த்து "பிள்ளை என்றால் இப்படி இருக்க வேண்டும். யார் பெத்த பிள்ளையோ? பேனபிறப்பில் என்ன புண்ணியம் செய்தார்களோ" என்று மலர் வாய் திறந்து புகழ, இவளுடைய மனிதாபிமான சேவையைக் காலையிலிருந்தே அவதானித்துக் கொண்டிருந்த வியாழாச்சிக்கிழவி தனக்கென்று சுடுநீர் போத்தலிலிருந்த தேநீரைக் கோப்பையொன்றில் ஊற்றிக் கொண்டு போய் "ஏய்..பிள்ளை..இதிலேருந்து இதைக் கொஞ்சம் ஓய்வெடுத்துக் குடி. களைப்புத் தீரும். இனியும் என்ன நடக்கப் போவுதோ...எந்த ஷெல் வந்து யார் தலையில் விழுதோ...எல்லாம் விதிதான். நீயும் எங்காவது போய் ஒதுங்கிக்கொள்" என்று கூறியபடி வடிவுக்கரசியிடம் நீட்டினாள். "அதொன்றும் நடக்காதணை...நீ ஒன்றுக்கும் யோசியாதை...நீ தான் எங்காவது போய் பத்திரமாக இரு..." என்று சொல்லிக்கொண்டே தேநீரை உறிஞ்சிக் கொண்டு வழமையாகத் தானும் மற்றத்தாதிகளுமிருக்கிற மேசையிலமர்ந்தாள். இதிலிருந்தால் முழு ஒன்பதாம் வாட்டுமே தெரியும்.

இந்த ஒன்பது வருட அனுபவத்தில் எந்நாளும் எந்நேரமும் முண்டியடித்துக் கொண்டிருக்கிற இந்த வாட்டுக்குள் இன்று வெறிச்சோடிப் போய் ஐம்பது கட்டில்களும் இருபுறமாகவும் அதனடியில் ஆங்காங்கே பாய்களும் தலையணைகளும் ஓவென்றிருந்தது.

'ஐயோ' என்று கதறியள வேண்டும் போலிருந்தது. மனம் நொந்து கண்கள் கலங்கினாள். இப்படியொரு வாழ்க்கையா? என்று வெறுமை தட்டியது.

கையும் ஓடாமல் காலும் ஓடாமல் மனம் சோர்ந்து போயிருக்க—மல்லிகா வந்தாள். மல்லிகாவும் இவளும் நல்ல நண்பிகள். வேலைக்கு வரும் போதும் வேலைமுடியும்போதும் கடைத்தெருக்களுக்குப் போகும் போதும் எப்பவும் சோடியாகத்தான் திரிவார்கள். அக்கா தங்கை என்பார்கள் சிலர். இரட்டையர்கள் என்பார்கள் மற்றும் சிலர். வேலையிலும் அப்படித்தான். வடிவைப் போலவே மல்லிகாவும் கடின உழைப்புக்கும் நேர்மையான கடமைக்கும் பேர்போனவள்.

வழமையான உற்சாகம் கலகலப்பு ஒருவரிலுமே இல்லை. மனம் சோர்ந்து உற்சாகமிழந்து போயிருந்தார்கள். ஒருவரக்கொருவர் ஆறுதல் கூட சொல்ல முடியாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு சோர்ந்து போயிருந்தார்கள்.

திடீரென்று "ர்..ர்..கடகட" என்று துப்பாக்கிச் சத்தங்கள்...இயந்திரத் துப்பாக்கியின் தொடர்ச்சியான வெடிகள். திடுக்கிட்டெழுந்து தட்டுத்தடுமாறி வெளியில் ஓடி வந்தார்கள். வெறிகொண்டு இயந்திரத் துப்பாக்கியால் சிறிக்கொண்டே இராணுவம் கண்டபடி கண்ணில் படுவோரையெல்லாம் சுட்டுக்கொண்டே ஓடிவந்தது. "அடியேய் ஆமிக்காரன் சுடுகிறான்டி" என்று கொண்டே இருவரும் அந்த நடைபாதையில் ஓடி, வலதுபுறமாகத் திரும்பி ஏற்கனவே முட்டி மோதிக்கொண்டிருந்த மக்கள் கூட்டத்துக்குள் ஓடினார்கள். இவர்கள்தான் இறுதியாக அங்கு வந்தபடியால் வரிசையில் முன்னுக்கு அகப்பட்டுக் கொண்டார்கள்.

இவர்கள் பீதியுடன் ஓடிவருவதைக் கண்டதும் ஏற்கனவே பயந்துபோயிருந்த நோயாளிகளும் உறவினர்களும் குய்யோ முறையோ என்று அலறினார்கள். இவர்கள் ஓடியதை இராணுவம் கண்டிருக்க வேண்டும். துரத்திக் கொண்டே வந்தவர்கள் வழியிலும் இடையிலும் தென்பட்ட அத்தனை ஆண்கள் பெண்கள் குழந்தைகள் நோயாளிகள் உறவினர்கள் ஊழியர்கள் என்கிற பாகுபாடில்லாமல் எதுவித விசாரணையோ இல்லாமல் கண்டபடி சுட்டார்கள். இவர்கள் இருவருமே —வெள்ளைத் தொப்பி, வெள்ளைச்சீருடையில்— தாதிகள் என்பது கூட அந்தக் கொலைஞர்களின் கண்களுக்குத் தெரியவில்லை.

"நாங்கள் இங்கே கடமை புரிகிற தாதிகள்"....வாய்திறந்து சொல்வதற்குள்ளேயே இயந்திரத் துப்பாக்கி மழை போல் பெய்தது. சன்னல்கள் சல்லடை போடப்பட்டன. சீருடையில் வந்தவர்களின் உள்ளங்களில் இரத்த வெறி...வெண் சீருடையிலிருந்தவர்களின் உடல்களில் இரத்தக்கறை...

—3—

மறுநாள் காலையில் சில இராணுவ மேலதிகாரிகளும் சிப்பாய்களும் முதல்நாள் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை வெளியிலெடுத்தார்கள் ஆஸ்பத்திரியா அல்லது பிணக்காடா என்றிருந்தது. மொத்தமாக அறுபத்தியொன்பது பேர் கொல்லப்பட்டிருந்தார்கள்.

அங்கே எஞ்சியிருந்த நோயாளிகள் உறவினர்கள், ஊழியர்கள், தாதிகள், டாக்டர்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள். மனித இனமே அழிக்கப்படுவது போல் பயந்தார்கள். புற்றீசல் போல் வைத்தியசாலை வளவினுள் எங்குபார்த்தாலும் இராணுவம் வாய்திறக்க எவருமே அஞ்சினார்கள். முதன்நாள் வடிவுக்கரசியினால் காப்பாற்றப்பட்ட அத்தனை நோயாளிகளும் தங்களைக் காப்பாற்றிய அந்தக் குலதெய்வம் செயலிழந்து உயிரற்றுக் கிடப்பதைப் பார்த்துத் தாளாமல் ஒப்பாரிவைத்து அழுதார்கள். அத்தனை உடல்களையும் ஒன்றாகப்போட்டு தகனஞ்செய்வதற்கான ஏற்பாடுகளை இராணுவம் அவசர அவசரமாகச் செய்தது. உண்மை எரிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டும். உலகிற்கு மறைக்கப்பட வேண்டும்.
உற்றார் உறவினர் யாருமன்றி அவர்களுடைய
தாய்க்கோ, தகப்பனுக்கோ, சகோதரர்களுக்
கோ, இவர்கள் இறந்துவிட்டார்கள் என்கின்ற
செய்திகூட தெரியப்படுத்தமுன்பு இறுதிமரியாதை
க்குக்கூட ஒரு சந்தர்ப்பம் வழங்காமல் அல்லும்
பகலும் வைத்தியசாலைக்காகவும் நோயாளிகளுக்
காகவும் சேவை செய்த அந்தத் தேவதைகள்
அனுதைகள் போல் அறுபத்தொன்பதோடு
இரண்டாக வைத்தியசாலையின் பின்மூலையில்
மலைபோல் குவிக்கப்பட்டு இராணுவம்
கொண்டுவந்த இரண்டு பீப்பாய் பெற்ரேலை
ஊற்றித் தீ மூட்டினர்கள்.

அந்த வானுயர்ந்த சுவாலை முழு வைத்திய
சாலையையும் எரித்தது போலிருந்தது.
அங்கு அந்த சேவைத் தேவதைகளுக்கு இறுதி
மரியாதை செலுத்துவதற்காக கூடிநின்றவர்கள்
மனதில் அந்தச் சுவாலை சுட்டது சரித்திரத்தில்
ஒரு புது அத்தியாயம் எழுதப்பட்டதை
உணர்த்திற்று.
இரத்தக்கறை படிந்த சீருடையும் உடலும்
தீயில் மெல்லக்கருகி உருகியது.

(யாவும் கற்பனையல்ல)

---

**WALTHAM FOREST THAMIL SANGAM**
**வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்**

*(Thamil School, Alai Osai, Women Group and Sports Club)*

---

தமிழ்ப் பாடசாலைப் பொறுப்பதிகாரிக்கான விண்ணப்பம்

---

பகுதி நேர வேலை

வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கத்தின் ஓர் அங்கமான தமிழ் பாடசாலைக்கு பொறுப்பதிகாரிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பதாரி தமிழிலும் ஆங்கிலத்திலும் போதியளவு அறிவுடையவராக இருக்க வேண்டும்.

சம்பளம்: சராசரியாக 70 பவுண்கள்(வாரம்)

விண்ணப்ப முடிவுத்திகதி; 15 ஆனி 1990.

விபரங்கள்; The Secretary,
104, Billet Road,
Walthamstow
London E 17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் செய்திகள்

** முதுபெரும் தொழிற்சங்கவாதியும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான ஜனாப் அப்துல் அஸிஸ் காலமானார்.

** மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எப் ஐச் சார்ந்தவருமான சாம் தம்பிமுத்து கனடிய உயர்ஸ்தானிகர் இல்லத்திற்கு வெளியேவைத்து சுடப்பட்டு மரணமானார்.

** ஜனதா விமுக்திப் பெரமுனையின் தலைவரான ரோகண விஜய வீராவும், அதன் உபதலைவர் உபதிஸ்ஸகமநாயக்காவும் சுடப்பட்டு மரணமானார்கள். பின்னர் சோமவன்ஸ அமரசிங்க என்பவர் தாமே அவ்வியக்கத்தின் தலைவர் என அறிக்கை வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

** 1983இல் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல்களின் பின் இவ்வருட இறுதிக்குள் இத்தேர்தல்களை நடாத்த அரசாங்கம் தயாராகிறது. 1988இல் இத் தேர்தல்களுக்கான நியமனங்கள் கோரப் பட்டு பின்னர் அவை பின்போடப்பட்டன.

** இத்தேர்தலில் வாக்காளர் தனக்குரிய 3 வாக்குகளையும் ஒரே வாக்காளருக்கே வழங்கக் கூடியதாக சட்டமூலத் திருத்தத்தை அரசு பாராளுமன்றத்தில் விரைவில் செய்யவிருக்கிறது. இதன்வாயிலாக வாக்காளர் தனக்கு விரப்பமான கட்சிக்கு வாக்களித்து பின்னர் தனக்குரிய விரப்புரிமை வாக்குகளை அதே கட்சியின் 3 வேட்பாளருக்கோ அல்லது ஒரே வேட்பாளருக்கோ வழங்கலாம்.

** அரசு – புலிகள் பேச்சு வார்த்தைகளை துரிதப்படுத்தும் நோக்கில் லண்டனில் விஜயம் மேற்கொண்டிருந்த நிதியமைச்சர் ஏ.சி.எஸ், கமீது உடனடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள் ளார்.

** வடக்கு–கிழக்கு மாகாண சபையை தம்வசம் வைத்துக் கொண்டுள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளது.

** அஸீஸின் மறைவின் பின்னர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவராக அதன் பொதுக்காரியதரிசி விபி. கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஈழத்து வெற்றிப்படங்களான புதியகாற்று, நான் உங்கள் தோழன் போன்றவற்றை தயாரித்து கதாநாயகனை நடித்தவர்.

** மே மாதம் 20ம் திகதி வடமத்திய மாகாண உறுப்பினர் திரு. நிசங்க திசாநாயக்கா தலை மையில் மதவாச்சியில் இருந்து வவுனியா வரை சமாதானம் வேண்டிப் பாதயாத்திரை ஒன்று செல்லவிருக்கிறது.
பௌத்த இந்து முஸ்லீம் கிறீஸ்த்துவ சமய குருமார்களுடன் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும் இதில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி விடை இல 13

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | 2 த் | 3 தி | 4 ர | 5 வ | 6 தை | 7 X | 8 க |
| 9 கை | 10 X | 11 ர | 12 X | 13 ட் | 14 டு | 15 தி | 16 ரு |
| 17 ய | 18 து | 19 வ | 20 X | 21 டி | 22 X | 23 X | 24 ஐ |
| 25 ல | 26 வ | 27 ம் | 28 கே | 29 X | 30 ழ | 31 ப | 32 ஜி |
| 33 ங் | 34 X | 35 X | 36 ச | 37 ம் | 38 ப | 39 ந் | 40 தி |
| 41 கா | 42 ய | 43 த் | 44 ரி | 45 X | 46 ச | 47 தி | 48 X |
| 49 ர | 50 சு | 51 பே | 52 ர | 53 X | 54 ம் | 55 X | 56 மு |
| 57 ம் | 58 ர் | 59 X | 60 வீ | 61 ர் | 62 ர | 63 க | 64 ள் |

## குறுக்கெழுத்துப் போட்டி வினா இல 14

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | 2 ரி | 3 சு | 4 ளி | 5 ப் | 6 பு | 7 X | 8 [illegible] | 9 [illegible] |
| 10 ண | 11 வா | 12 ம் | 13 X | 14 உ | 15 | 16 ம் | 17 [illegible] | 18 ல் |
| 19 ய | 20 சு | 21 [illegible] | 22 X | 23 X | 24 | 25 | 26 பு | 27 X |
| 28 ம் | 29 X | 30 [illegible] | 31 மா | 32 [illegible] | 33 X | 34 உ | 35 லை | 36 ர |
| 37 X | 38 ளி | 39 [illegible] | 40 [illegible] | 41 கு | 42 X | 43 | 44 X | 45 [illegible] |
| 46 ஒ | 47 நெ | 48 X | 49 | 50 X | 51 ர் | 52 உ | 53 பா | 54 ர் |
| 55 தூ | 56 வ | 57 உ | 58 ம் | 59 X | 60 ட | 61 X | 62 த் | 63 கா |
| 64 ந் | 65 X | 66 ரு | 67 X | 68 X | 69 ட் | 70 X | 71 தி | 72 ல |
| 73 தி | 74 | 75 ர | 76 ன் | 77 X | 78 தி | 79 நி | 80 ர | 81 ம் |
| 82 [illegible] | 83 பு | 84 ம் | 85 லி | 86 X | 87 வ | 88 ள | 89 ம் | 90 X |

சரியான விடையனுப்பும் முதல் அதிஸ்டசாலிக்கு 10 பவுண்களைப் பரிசாகத் தருகிறார் திரு. வி கே சுரேஸ். விடையனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.06.90. முகவரி முன்பக்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி வினா இல 14

## இடமிருந்து வலம்

1. பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய மாணவனுக்குப் ______ விழாவில் பல பரிசுகளும் பாராட்டும் வழங்கப்பட்டன.
8. இது இல்லாதவன் ஏழை. இருப்பவன் பணக்காரன். (குழம்பியுள்ள)
10. பொங்கல் விழாவன்று இரவில் சிறுவர் வெடி, ____ கொழுத்தி மகிழ்வார்கள். (குழம்பி)
14. பல கணவர்களின் வெற்றிக்குப் பெண்கள் _____ ஆக இருந்திருக்கிறார்கள். (குழம்பியுள்ளது)
15. ___ நட்சத்திரத்தில் பிறந்த பிள்ளை அதிஸ்டசாலி எனக் கூறுவார்கள். (குழம்பியுள்ளது)
24. இது பழுத்தால் வௌவாலை வாவென்று அழைக்கவும் வேண்டுமா? (குழம்பியுள்ளது)
30. மணமக்கள் மணப்பந்தலில் இதை மாற்றிக் கொள்வார்கள்.
34. இதை மறக்கச் சிலர் குடிப்பதுண்டு. (குழம்பியுள்ளது)
38. நாளாந்தம் இது இன்றேல் உடலும் உடையும் அசுத்தமாகி விடும். (குழம்பியுள்ளது)
46. வீதியின் மறுபெயர் குழம்பி விட்டது.
51. அரசன் கோலோச்சும் இடம். (குழம்பி விட்டது)
55. சிறு துரும்பும் பல் குத்த ____. (குழம்பியுள்ளது)
62. பரம்பொருளின் ஐந்தொழில்களில் ஒன்று, ஈற்றெழுத்துக்களான ஈரெழுத்து விடுபட்டுக் குழம்பி உள்ளது.
71. அறிவையும் சந்திரனையும் குறிக்கும் ஓர் சொல் குழம்பியுள்ளது.
73. உள்ளத்தை அபகரிக்கும் போது மகிழ்கிறோம். பொருளை அபகரிக்கும் போது திட்டுகிறோம். யாரிவன்? (குழம்பியுள்ளது)
78. ஆலயத்தின் ____ தூரம் வரும்போதே தெரிகின்றது.
82. தன் குழந்தைக்கு உணவூட்ட அம்மா, அடிக்கடி காட்டும் உருவம்.
87. முனிவர் தவம் செய்ய உகந்த இடம்.

## மேலிருந்து கீழ்

1. இந்நாட்களில் செல்வந்தர்களை ____ வைத்துப் பணம் பறிப்பது ஒரு வகை முறை.
2. குதிரைச் ___ செய்யச் சிலருக்கு அலாதிப் பிரியம். (தலை கீழ்)
3. தைப்பொங்கலை அடுத்து இந்துக்கள் கொண்டாடும் புனித நாள். (தலை கீழ்)
5. இது இல்லாப் பண்டம் குப்பையிலே. (ஈற்றெழுத்து விடுபட்டுள்ளது—தலைகீழ்)
6. ஆலய உச்சியை இப்படி அழைக்கலாம். ( " " " )
8. புலிகளின் சரித்திரப் புகழ் பெற்ற இடம்.
9. இதற்குச் செருப்பில்லை எனக்கவலைப் பட்டேன். ஆனால் எதிர்ப்பட்டவனுக்கோ இது இல்லை.
16. அரசியல்வாதிகள் கண்டவுடன் அடிக்கடி _____ சொல்லுவார்கள். (தலை கீழ்)
22. சுவை மிகு உணவு. பயணங்களின் போது சுவைத்து உண்ணக்கூடியது. (தலை கீழ்)
32. பல சீப்புக்கள் சேர்ந்தாலும் இதுதான். நாயின் ஒலியும் இதுதான். ( " )
36. ஈழத்தில் தென்பகுதியில் முருகன் குடி கொண்டிருக்கும் இடம்.
38. சிந்தையிலே ____ உள்ளவர்கள் அதிகம் பேச மாட்டார்கள். (தலை கீழ்)
46. அம்மி மிதித்து _____ காட்டிய பின்பும் அந்நிய ஆடவருடன் ஓடும் பெண்ணை என்ன என்று சொல்வது?
51. இம்முனிவரின் சொத்தான காமதேனுவால் விசுவாமித்திரர் பல அல்லல்கள் பட்டார். (தலைகீழ்)
53. மணிமேகலையிடம் ஒரு அட்சய ______ இருந்தது.
57. இதற்கு மை தீட்டி அழகு காட்டும் மங்கையர் எத்தனை பேர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. உமையவளை ___ இருத்தி மகிழ்ந்தவர் மகேஸ்வரன். (முதலெழுத்து இல்லை)
76. இசைக்கருவிகளுள் பிரசித்தமானது-(முதலிரு எழுத்துக்கள் விடுபட்டு மீதி தலை கீழ்)
79. பாரத்தின் மறு சொல். (ஈற்றெழுத்து விடுபட்டுள்ளது)

கடந்த இதழில் இடம் பெற்ற குறுக்கெழுத்துப் போட்டியில் பல வாசகர்கள் பங்கு பற்றி உள்ளார்கள். இவர்களுள் பரிசு பெறும் அதிஸ்டசாலி: திருமதி. ஆர். மனோகரன், 70, வெலிங்டன் அவென்யூ, எட்மன்ரன். பரிசுத் தொகையான 10 பவுண்கள் உடனும் அனுப்பிவைக்கப்படும். இப்பரிசை வழங்குபவர் சி. ந. ரகுராம் அவர்கள்.

பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

1. திருமதி. பி. எம். தக்சினி, அப்பர் ரோட், லண்டன் ஈ 13.
2. திரு. சுப்பிரமணியம், கோஸ்டன் கிறெசன், கிறீன்பேட்.
3. திருஆர். கருணாகரன். டென்மார்க்.
4. திரு. அ. ஜே. ஞானேந்திரன். குவைத்.
5. திரு. கே. இராசநாயகம், பார்க் வே, குயின்ஸ் டிறைவ் கோட், லண்டன் என்4.
6. செல்வி. ஆர். தாரணி, வாட்டர்மில் லேன், எட்மன்ரன்.

இவ்வாறு அதிஸ்டசாலிகளுக்கும் அலை ஓசையின் மே-ஜூன் இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படு குறுக்கெழுத்துப் போட்டியில் பங்கு பற்றிய அனைத்து வாசகர்களுக்கும் அலை ஓசையின் வாழ்த்து உரித்தாகுக.



FOR TRUE FLAVOUR
FINEST SRI LANKAN AND SOUTH INDIAN CUISINE
FULLY LICENSED
"THAMOULINEE"
Our Specialities Include
Kottu Roti, Godamba Roti, Puttu, Kottu Puttu, Kottu Indi Appam,
Whole Range of Hoppers And Dhosai.
Arrack, Toddy, and Sri Lankan Beer Available.
128, A Uxbridge Road, Hayes, Middlesex UB4 0JH
Telephone 01 561 3723
12, Rue Arthur-Groussier
75010 Paris.
Tel: 48033308/42027586




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் உள்ளங்கள்

* அன்பு அலை ஓசை ஆசிரியருக்கு,

குறுக்கெழுத்துப்போட்டி மிகச் சிக்கலாக இருந்தாலும் தரமானதாக இருந்தது. சிந்திக்கச் சில மணிநேரம் தேவைப்பட்டது. பங்குனி–சித்திரை வெளியீடு மிக நன்றாக இருந்தது.

– இ. கருணாகரன் –
டென்மார்க்.

* அன்புடையீர்,

தெளிவற்ற 24ம் பக்கம் (பாதி வயிறு நிரம்பிக் கொண்டிருக்கும் போது சோற்றுக் கோப்பையைத் தட்டி விட்டது போல) தெளிவாக இல்லாததால் கதையின் விறுவிறுப்புப் பாதிக்கப்பட்டு விட்டதே. எது எப்படி இருப்பினும் ஒரு ஆங்கிலேய நாட்டில் தமிழ் நறுமணங் கமழ தாங்கள் ஆற்றும் பணி மகத்தானது.

–அ. ஜே. ஞானேந்திரன் –
குவைத்.

* அலை ஓசை ஆசிரியருக்கு,

மாஸ்டர் ரவீந்திரனின் விடிய லைத்தேடி சிறுகதை ஆழமாக மனத்தைத் தொட்டது. அதை எழுதிய ஆசிரியருக்கு எமது வாழ்த்துக்கள்.

–ச. மனோகரன் –
ஈஸ்ட்காம்.

* ஆசிரியரே,

லண்டனில் தமிழர் சந்ததி கொல்லப்படுகிறதா என்று உள்ளதை உள்ளபடி எழுதிய சக்திவேலுக்கு எமது பாராட்டுக்கள்.

–ஞானலட்சுமி–
வெம்பிளி.

* அன்பு ஆசிரியருக்கு,

லண்டன் செய்திகள் மிக நன்றாகவும் உதவியாகவும் இருந்தது. இரு மாதங்களுக்கான நிகழ்ச்சி நிரலை ஒருங்கே தந்து எமக்கு அவற்றுக்கான நேரத்தை ஒதுக்க வைத்தமைக்கு நன்றிகள்.

–ராஜகுலேந்திரன்–
எட்மன்ரன்.

* அலை ஓசை நிர்வாகிகளுக்கு,

பங்கயமணாளனின் "கேள்வியும் நானே, பதிலும் நானே" மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதாக அமைந்தது. அவருக்கு எமது வாழ்த்துக்கள்.

–நிமலராஜ்–
வூட்கிறீன்.

* ஆசிரியரே,

மங்கையர் மஞ்சரியை மாற்றியமையுங்கள். சமையலை விடுத்து வேறு பிரசுரியுங்கள்.

–பானுமதி–
சவுத்தோல்.

* அன்புள்ள ஆசிரியருக்கு,

லண்டனிலும் மற்றும் வெளிநாடுகளிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளின் படங்களையும் கூடுதலாகப் பிரசுரித்தால் நன்றாக இருக்கும். முயலுங்கள்.

–பாலநந்தினி–
அடிஸ்கோம்.

* பெரியவரே,

அட்டைப்படம் என்னையா கூறுகின்றது. ஒரேயடியாகத் தலையைச் சுற்றுகிறீர்? தண்ணீர் பட்டபாடு உண்மையிலேயே தண்ணீர் தான். ஆக்கியவருக்கு வாழ்த்துக்கள்.

–மயில்வாகனன்–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அவர்கட்கு,

அலையோசை மார்ச்-ஏப்ரல் 1990 இதழில் பக்கம் 31 இல் வெளியிடப்பட்ட செய்தி பற்றிய திருத்திய செய்தி இது என்பதால் இதைப்பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அலை ஓசை அச்சிற்குப் போகும் தறுவாயில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிய செய்தி என்பதால் கடைசி நிமிடத்தில் நிகழ்ச்சி பற்றிய முழுத் தகவல்களையும் கொடுக்க அலை ஓசை தவறி விட்டது. நிகழ்ச்சி பற்றிப் பெண்கள் அமைப்பினால் தரப்பட்ட செய்தியை வாசகர்களுக்குத் தருகிறோம்.

சர்வ தேசப் பெண்கள் தினம், பற்றிய வரலாற்றுக் குறிப்புகள், பெண்களின் சமத்துவம், சர்வ தேச ரீதியில் எந்த அளவில் நடைமுறையில் உள்ளது என்பது பற்றிய புள்ளி விபரத் தகவல்கள் போன்றவற்றைக் கொண்ட பிரசுரங்களை வாயிலில் வழங்கி, பின்பு சர்வதேசப் பெண்கள் தினம் பற்றிய விளக்க உரையை ஆரம்ப உரையாகக் கொண்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. எமது பெண்கள் அமைப்பின் எதிர்காலத்திட்டங்கள் தீட்டுவதற்கு வகை செய்யும் நோக்கில் கேள்விக் கொத்து ஒன்று சமுகமளித்த பெண்களுக்கு விநியோகிக்கப்பட்டு அவர்களின் பதில்கள் கோரப்பட்டன.

தாமதமாக நிகழ்ச்சிகள் ஆரம்பமானதாலும், டி.வி இன் திரை சிறியதாக இருந்ததாலும் 'வுமன் அன்ட் வேர்க்' இடையில் நிறுத்தப்பட்டுப் பெண்களுக்கான தற்பாதுகாப்புச் செயல் முறைகள் பெண்மணி ஒருவரினால் பெண்களுக்குச் செய்து காட்டப்பட்டன. பெண்களின் பெருமை, தமிழ்ப்பெண்கள் இவ்விடம் எதிர் நோக்கும் பிரச்சனைகள், என்பன பற்றிய சிற்றுரைகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள், பெண்களாலும், தமிழ்ப்பாடசாலைச் சிறுமிகளாலும் சிறப்புற வழங்கப்பட்டன. மகாகவி பாரதியாரின் பெண் விடுதலைப்பாடல்களும், பெண்களின் சமத்துவத்தை விளக்கும் பாடல்களும் சிறுமிகளாலும், பெண்களாலும் பொருள் பொருந்தும் வகையில் பாடப்பட்டன.

தமிழ்ப்பாடசாலை சிறுமிகளின் எமது பாரம்பரியப் பெண்கள் நடனமான "கும்மி" இடம் பெற்றது. சுதந்திரப் பெண், விடுதலைப்பெண், போன்ற பெண் ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரல் பாடல்களுக்கு பெண் பிள்ளைகளால் தத்துவருபமாக பரத நாட்டிய முறையில் விளக்கப் பட்டன. நிகழ்ச்சிகள் யாவும் சங்கத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவரினால் சிறப்பாக வீடியோவில் படமாக்கப்பட்டன. இடைவேளையின் போது பெண்களால் தயாரிக்கப்பட்ட சுவையான சிற்றுண்டிகள் பரிமாறப்பட்டன.

மிகக் குறுகிய காலத்தில் இப்படிக் கருத்து நிறைந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து வழங்கிய பெருமை பெண்கள் அமைப்பைச் சேர்ந்த 13 பெண்களையும் தமிழ்ப்பாடசாலைச்சிறுமிகளையும் சாரும்.

-பெண்கள் அமைப்பு-
(வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்)

---

பொது வாழ்வு

பொது வாழ்வு என்பது கரும்பைச் சுவைப்பது
போலல்ல. கரும்பைக் கைகளால் தடவுவது
போல. தடவிப் பார்த்தால் தான் தெரியும்
கை முழுவதும் 'சுனைகள்' குத்திக் கொள்ளும்.

-கலைஞர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் நிகழ்ச்சிகள்

## தமிழர் நலன்புரி சங்கம் (நியூகாம்) யூ.கே




21.4.90 அன்று மாலை 6.30 மணியளவில் தமிழர் நலன்புரிச் சங்கத்தால் (நியூகாம்) ஒரு கலாச்சார மாலைப்பொழுது, தமிழர் புத்தாண்டை ஒட்டி மிகச் சிறப்பாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. விழா நடைபெற்ற மண்டபம் ஓர் ஒதுக்குப்புறமாகவும், அதற்கு எது வாயிலென்று பார்வையாளர்களுக்கு வழிகாட்டாமையும் மிகவும் வேதனைக்குரியதொன்று. மண்டபத்தினுள் நுழைந்ததும், பார்வையாளர்கள் எல்லோரும் தமிழ்க் கலாச்சாரத்தின்படி வந்திருந்தமையால் நாம் எல்லோரும் இலங்கையில் இருக்கிறோமா? என்று எண்ணத்தோன்றியது, இருந்தாலும் காலநிலை காட்டிவிட்டது அப்படியில்லை என்பதை.

முதலில் சிறுவர் சங்கத்தால் நடாத்தப்பட்ட நடனநிகழ்ச்சியும், அடுத்து இலண்டன் முருகன் கோவில் மாணவர்களால் நடாத்தப்பட்ட வாத்தியக் கச்சேரியும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்ததுடன் இசை, நடனங்களை பார்த்தும், கேட்டும் அனுபவிக்கக்கூடியதாக இருந்தது.

இடைவேளையின்போது வழங்கப்பட்ட குளிர்பானங்களும், சிற்றுண்டிவகைகளும் மிகவும் சுவையாக இருந்தது. அதைத் தொடர்ந்து நாத வித்தியாலய மாணவர்களால் வழங்கப்பட்ட வயலின் இசை பார்வையாளர்களால் மிகவும் பாராட்டுப் பெற்றதொன்றாக இருந்தது. அடுத்து இடம்பெற்ற நடன நிகழ்ச்சி, வீணைக்கச்சேரி இரண்டும் மெச்சத்தக்க முறையில் இருந்தன.

சிறப்பு விருந்தினராக நியூகாம் சட்டசபை உறுப்பினர் கலந்து தமிழர் நிலமையைப் பற்றியும், தனது இலங்கை விஜத்தையும் பற்றிக்கூறியதோடு தமிழ்மக்களுக்குத் என்றென்றும் தனது உதவி கிடைக்கும் என்றும் உறுதியளித்தார்.

இறுதியாக ரெயின்போ இசைக்குழுவினரால் நடாத்தப்பட்ட இசைக்கச்சேரி மிகச்சிறப்பாக இருந்தது. நிகழ்ச்சிகள் 11.00மணியளவில் முடியவேண்டியிருந்தும், காலதாமதமாக 12.30மணியளவில் நிறைவேறியமை மிகவும் மனவருந்தவேண்டியதொன்று.

(மேலேயுள்ள படத்தில் சங்கத்தின் நிகழ்ச்சிகளில் இடம்பெற்ற ஓர்கட்டத்தைக் காணலாம்).

(தகவல்:- திருமதி. திருநீலகண்டன்)

---

## யுகதர்மம்



கே.பாலேந்திராவின் நெறியாள்கையில் "யுகதர்மம்" நாடகம் வில்ஸ்டன் கிரீன் நூலக மண்டபத்தில் 25.3.90 அன்று நடைபெற்றது. பாலைவனத்தில் பிரயாணம் செய்யும் ஒரு முதலாளிக்கும் ஒரு தொழிலாளிக்கும் இடையே நடைபெறும் உரையாடல்கள். இந்த உரையாடல்களில் இடையிடையே கலந்து கொள்ளும் மற்றைய பாத்திரங்கள் சிறந்த பாடல்கள். எந்தவிதக் காட்சியமைப்புமின்றி சிறந்த ஒளியமைப்பையும் பின்னணிப் பாடல்களையும் துணையாகக் கொண்டு தமது சிறந்த நடிப்பாற்றலின் மூலம் எம்மையும் பாலைவனத்ினூடாக அழைத்துச் செல்கிறார்கள். அனைவரும் பார்க்கக் கூடிய நாடகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESSEX TAMIL ASSOCIATION

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட எசெக்ஸ் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப் புத்தாண்டு விழா 14,லெயிரன் அசெம்பிளி மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
நடனம்,நாட்டுக்கூத்து,இசைக்கச்சேரி என்பன மிகவும் சிறப்பாக நடத்தப்பட்ட இந் நிகழ்ச்சியின் இறுதியில் இரவுப்போசனமும் வழங்கப்பட்டது.





# TAMIL ORPHANS TRUST

28.4.89 அன்று சனிக்கிழமை மாலை தமிழ் அனாதைகள் நம்பிக்கை நிதியத்தின் சார்பில் இலங்கையிலுள்ள தமிழ் அனாதைச்சிறுவர்களுக்கு நிதிதிரட்டுமுகமாக ஒரு நாட்டிய,இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி 26.1.90 அன்று நடைபெறஇருந்து,காலநிலை அழிவினால் ஒத்திவைக்கப்பட்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.
விழாவின் ஆரம்பத்திலேயே அதற்கான மன்னிப்பு பார்வையாளர்களிடம் கேட்கப்பட்டு.நிகழ்ச்சிகள் மங்கலவிளக்கேற்றலோடு ஆரம்பமாகியது.
நிகழ்ச்சிகள் வணக்கப் பாடலோடு அரம்பமாகியது.அடுத்திடம்பெற்ற நடன நிகழ்ச்சிகள், வயலின் இசை போன்றன கண்ணனின் லீலைகளை அபினயத்தின் வாயிலாகவும்,செவிக்கினிய இசை வாயிலாகவும் அளித்தந்தன.
அடுத்திடம்பெற்ற வாத்தியவிருந்து நிகம்ச்சி பிரபல்யம் வாய்ந்த அந்த ஆசிரியர்களின் திறமையை எடுத்துக்காட்டியதுமல்லாமல்,இலண்டனில் வருங்காலத்தில் நம் கலாச்சாரம்,நமது இளைய சந்ததியால் வளர்க்கப்படும் என்ற நம்பிக்கையை எமக்கெடுத்தியம்பியது.
நிதியத்தின் தலைவர் திரு.விமல்.சொக்கனாதனின் உரையில் நிதியத்தின் கடந்தகாலச் சேவையும், மேலும் தங்களது வருங்காலத் திட்டமும் அடங்கியிருந்ததோடு,மேலும் எல்லோரது ஒத்துழைப்பும் கோரப்பட்டது இங்கு முக்கியமானது.

அடுத்திடம்பெற்ற பரதநாட்டிய நிகழ்ச்சியும், அதையடுத்து விசேடவிருந்தினர் உரையும் சபையோரைக் கவரக்கூடியதாக இருந்தது.
இடைவேளைக்கு முன்னதாக மேடையில் ஒரு சிறிய அளவிலான ஏலம் போடப்பட்டு, சபையோரிடம் இருந்து நிதியத்திற்காக பணம் சேகரிக்கப்பட்டது மிகவும் வரவேற்கப்படவேண்டியதொன்று.அத்துடன் சபையோரிடத்திலிருந்து பெரும் வரவேற்பும் அதற்குக் கிடைத்தது.
பிரதம விருந்தினராக பிறேன்ற் கவுன்சில் மேயர் கவுன்சிலர் வில்லியம் வரவழைக்கப்பட்டு அவரது உரையும் நிகழ்ச்சிகளின் இடையில் இடம் பெற்றது.
இறுதியாக இசை விருந்து நிகழ்ச்சியுடன் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறின.
இந்நிகழ்ச்சிகளின் போது தமிழ் மொழியே பெரும்பாலும் அதாவது நிகழ்ச்சி அறிவிப்பாளரானாலும் சரி,தலைவர் உரையானாலும் சரி,விசேட விருந்தினர் உரையானாலும் சரி இடம்பெற்றமை வரவேற்கப்படவேண்டியதொன்று.இதைப் பின்பற்றி இங்குள்ள மற்றைய மன்றங்கள்,சங்கங்கள் போன்றவை இரவல் மொழியை விடுத்து,நமது மொழியையே பாவிப்பது சாலச்சிறந்ததொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





லண்டன் வாழ் கலைக்குடும்பத்தின் அங்கத்தினர்களான, நடன ஆசிரியை திருமதி பத்மினி குணசீலன் அவர்களும் வயலின் ஆசிரியை திருமதி கலைவாணி இந்திரகுமார் அவர்களும் இணைந்து வழங்கிய கலைநிகழ்ச்சி ஏப்ரல் மாதம் 28ம் திகதி கம்டன் ரவுன் ஹோலில் இடம் பெற்றது. திருமதி பத்மினி குணசீலன் 'நர்த்தன கலாலயா' என்னும் பெயரிலும், திருமதி கலைவாணி இந்திரகுமார் 'நாதவித்யாலயா' என்னும் என்னும் பெயரிலும் கலைக்கூடங்களை நிறுவித் தமது சேவைகளை லண்டன் வாழ் தமிழர்களுக்குச் செய்து வருகிறார்கள். அதே வேளை பத்மினி வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்க நடன ஆசிரியையாகவும், கலைவாணி மேற்கு லண்டன் தமிழ்ப் பாடசாலை வயலின் ஆசிரியையாகவும் கடமையாற்றி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பம்சங்கள்:

1. வயலினைப்பற்றிய முழு விபரங்களடங்கிய "கைட் டு மியூசிக் லேர்னிங்" என்னும் நூலை கலைவாணி எழுதி வெளியிட்டுள்ளார். தமிழக இசைக்கல்லூரியின் பயிற்சி நெறி, பாடநெறித் திட்டத்தை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. அத்தோடு வயலின் ஸ்வரங்களை உள்ளடக்கிய கசட்டையும் வெளியிட்டுள்ளார். வீட்டிலிருந்தே வயலின் பயிற்சி பெறுவதற்கு இந்நூலும் கசட்டும் வழி வகுக்கும்.
2. பத்மினியின் நெறியாள்கையில் "சீதாபகரணம்" நாட்டிய நாடகம் மிகச்சிறப்பாக அமைந்தது. நடிகையர் தேர்வு, இசையமைப்பு, நாட்டிய அமைப்பு, ஒளியமைப்பு ஆகிய அனைத்தும் சிறப்பாக அமைந்த இந்த நாட்டிய நாடகத்தின் மூலம் தன்னை இவ்வாசிரியை இனங் காட்டியுள்ளார்.
3. 700இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கலந்து கொண்டனர். 55மாணவ மாணவியர் மேடையேறினர்.

நமது கருத்து: லண்டனில் இரு கலை மேதைகள் இணைந்து புரிந்துணர்வோடு தமது திறமைகளை வெளிக்கொணர்வது பாராட்டுக்குரியது. வளர்க அவர்கள் சேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லண்டன் ஆங்கிலோ தமிழ் சங்கம்




லண்டன் ஆங்கிலோ-தமிழ்ச்சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழா 21.04.90 அன்று
மா லை 6.30இற்கு ஆரம்பமானது. சங்கத்தின் பாடசா லை மாணவியரால் தேவாரம்
பாடப்பட்டது. த லைவருரையையும் கல்லூ ரி மாணவியின் உரையையும் அடுத்து கீழ்ப்பிரிவு
மாணவியரால் பொம்மைப்பாடல் பாடப்பட்டது. ஈஸ்ட்காம் ஶ்ரீ மீனாட்சி நடனக் கல்லூ ரி மாணவி
யரின் நடனம் கண்ணுக்கு விருந்தளிப்பதாக அமைந்தது. த லைமையாசிரியரின் சிற்றுரையை
அடுத்து கீழ் வகுப்பு மாணவியரின் 'சின்னஞ்சிறிய' நாட்டியம் அரங்கேறியது. பாடசா லை மாணவ
னின் மழ லைப் பேச்சை அடுத்து ஓர் மாணவியின் தனிநடனம் சிறப்பாக அமைந்தது.
மேல் வகுப்பு மாணவியரின் "புள்ளிப் புள்ளி மானே" குழுப்பாடல் சிறப்பாக அமைந்தது.
இன்னும் சில பாடல்க ளையடுத்து தெற்கு லண்டன் தமிழ்ப்பாடசா லை மாணவியரின் வீணைக்கச்சேரி
சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது. மிக நீண்ட இடைவே ளையின் பின்னர் பிரதம விருந்தினர்
திரு ஜி. சாவா உரை நிகழ்த்தினார். அத னைத் தொடர்ந்து மேல் வகுப்பு மாணவியரின்
குழு நடனத்தின் பின்னர் கீழ் வகுப்பு மாணவரின் காவடியாட்டம் வெகு சுவாரசியமாக இருந்தது
செயலாளரின் நன்றி நவில லைத் தொடர்ந்து நடன, பாடல் நிகழ்ச்சிகள் அரங்கேறின.
நிறைவு நிகழ்ச்சியாக ஶ்ரீமீனாட்சி நடனப் பாடசா லை மாணவி செல்வி சுபாசினி புவனேந்திரம்
பிள் ளையின் நாட்டியம் சபையினரைக் கவர்ந்தது. சுபாசினியின் தாளலயத்தோடு கூடிய முகபாவ
கள் நடனத்தை ரசிக்க வைத்தன. மொத்தமாகப் பார்க்குமிடத்தில் நிகழ்ச்சிகளுக்கிடையே உள்ள
இடைவெளி சபையினரின் பொறுமையைச் சோதித்தது. மிகக் குறுகிய காலமான ஒரு வருட
காலத்தில் இத்த னை தூ ரம் வளர்ச்சி பெற்றமை பாராட்டத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MANORAMAA(LAI)



கடந்த 6.4.90 வெள்ளிக்கிழமை வெஸ்ட் மினிஸ்டர் சென்ரர் மண்டபத்தில் "இன்ஸ்ரிரியூட் ஒப் ஈஸ்ரேன் கல்சர் அன்ட் ஆட்ஸ்" ஆதரவில் மனோர(மா)லை என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அனேகமாக எல்லாக் கலைநிகழ்ச்சிகளிலும் நிரம்பி வழியும் சனக்கூட்டத்தை அன்றைய நிகழ்ச்சியில் காண முடியாதிருந்தது வருந்தத்தக்கது. வழக்கமாக எல்லா நிகழ்ச்சிகளிலும் நடப்பது போல் இந்நிகழ்ச்சியும் ஆரம்பிக்கவே 8மணிக்கு மேலாகி விட்டது. ஒருவாறாக 8.30 மணியளவில் ரி.எம்.சௌந்தரராஜனின் புதல்வர் ரி.எம்.எஸ்.செல்வகுமார் அவர்களின் பக்திப்பாடலுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து திருச்சி லோகநாதனின் புதல்வர் ரி.எல்.தியாகராஜன், நடிகை மனோரமாவின் புதல்வர் பூபதி, பாடகி ரமாப்பிரபா ஆகியோர் சினிமாப் பாடல்களைப் பாடினார்கள். இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள் ரி.எம்.எஸ்.செல்வகுமாரும் ரி.எல்.தியாகராஜனும் பாடிய பாடல்கள் தான். தாம் பிரபல பாடகர்களின் வாரிசுகள் என்பதனைத் தம் குரலால் நிருபித்த இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். பூபதி பாடிய பாடல்கள் எல்லாம் டப்பாங்கூத்துப் பாடல்கள் என்பதால் அவை ரசிகர்களிடம் அதிகம் எடுபடவில்லை. ஆனால் அவரது ஆட்டம் ரசிகர்களைச் சிரிப்பில் ஆழ்த்தத் தவறவில்லை.

அதனைத் தொடர்ந்து தமிழ்த்திரையுலகில் கவியரசு கண்ணதாசனால் அறிமுகப்படுத்தப்பட்டு 1000 படங்களிற்கு மேல் நகைச்சுவை நடிகையாகவும் குணசித்திர வேடத்திலும் நடித்துத் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துள்ள நடிகை மனோரமா அவர்கள் பலத்த கரகோசத்திற்கு மத்தியில் மேடையில் தோன்றினார். தமிழ்த்திரைப்படங்களில் தான் பாடிய அநேகமாக பாடல்களைப்பாடி ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினார். அத்துடன் திரிபடைந்ததமிழின் 3 வேறுபட்ட பாணியில் நடித்தும் காட்டி நிகழ்ச்சியை மெருகூட்டினார். அதனைத் தொடர்ந்து மேலும் சில பாடல்கள் பாடப்பட்டன. அத்துடன் அதிஸ்ட லாபச்சீட்டும் குலுக்கப்பட்டு முதல் பரிசான கார் நோர்வேயைச் சேர்ந்த ஒரு ரசிகருக்குக் கிடைத்தது. மொத்தத்தில் மனோரமாலை மனோரமாவின் நிகழ்ச்சியையும் மற்றும் ஒரு சில பாடல்களையும் தவிர கலை இழந்த மாலையாக அமைந்தது. அத்துடன் இரு மணித்தியாலயங்கள் தாமதித்து ஆரம்பமாகி ரசிகர்களிடம் சலிப்பையேற்படுத்தியது குறிப்பிடத் தக்கது.

சி.ந.ரகுராம்
-நமது அலுவலக நிருபர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*

KUMARANS

FOR

**Sri Lankan &**

**South Indian Food Products, Magazines, News Papers, Cine-Publications, Tamil Audio & Video Cassettes and C.D.**

also

Fax Facilities to
Sri Lankan & South India

142, Hoe Street, Walthamstow,
London E17 4QR
Tel: 081-521 4955 & 081-520 5960
FAX: 081-521 9482

OPEN SEVEN DAYS A WEEK
(9.00 a.m. to 9.00 p.m.)

**THE RESTAURANT FOR WHICH YOU HAVE BEEN WAITING**

**NOW OPEN!**

MADRAS SINGAPORE/MALAYSIAN RESTAURANT

FULLY LICENSED

247 PLASHET ROAD, UPTON PARK, E13
TEL: 472 8800

WHERE YOU CAN ENJOY REAL DELICIOUS ORIENTAL FOOD.

SERVED DAILY:-
BILAL TANDOORI CHICKEN, CHICKEN TIKKA, MURTABAK, TILOR (EGG) ROTTI, ROTTI CHANAI, MEE GORING, NASI GORING, MEESIAM BIRIYANI, TANDOORI FISH.

AND THE VERY FAMOUS SINGAPORE/MALAYSIAN IKAN BILLIS WITH ONIONS

AND MANY OTHER MOUTH WATERING SAVOURY AND SWEET DISHES YOU HAVE NEVER ENJOYED BEFORE

**TAKE AWAY SERVICE AVAILABLE**

IF YOU WANT ANYTHING NOT LISTED PLEASE ASK!

OPENING HOURS OPEN SEVEN DAYS A WEEK
11am-3pm
6pm-12pm (LAST ORDER (11.45pm)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி நாட்டுச் செய்திகள்

பாரிஸ் நகரத்தில் மே மாதம் 5ம் திகதி பாரிஸ் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் 3வது கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சி முன்னைய நிகழ்ச்சிகளிலும் விட மிகவும் சிறப்பாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நிகழ்ச்சியில் இலண்டன் "சொப்ற் ஒப்பரஸ்" இசைக்குழுவினரால் மெல்லிசை நிகழ்ச்சி வழங்கப்பட்டது. பாரிஸ்இல் உள்ள பாடகர்கள் பாடல்களைப் பாடினர். பாடல்களுக்கும், இசைக்கும் எந்தவித சம்பந்தமுமே இல்லாமலிருந்தது. காரணம் ஒத்திகை பார்க்காதது போலும். நிகழ்ச்சி ரசிகர்களுக்குச் சலிப்பைக் கொடுத்துக்கொண்டிருக்க இசைக்குழுவின் "கிற்றூர்" வாத்தியக் கலைஞர் பொப்பிசைப் பாடல்களைப் பாடி நிகழ்ச்சியின் குறையை நிவர்த்திசெய்ய முயன்றார். ஈழத்தில் புகழ்பெற்ற பல பொப்பிசைப்பாடல்களை நன்றாகப் பாடினார். இருந்தும் மெல்லிசை நிகழ்ச்சி ரசிகர்கள் எதிர்பார்ப்பை ஏமாற்றிவிட்டதெனலாம்.

நிகழ்ச்சியில் இரண்டாவதாக வினிதா சவுந்தரநாயகம் தயாரித்தளித் நடனமும், கும்மிநடனமும், மயில் நடனம் போன்றன சுமாராக இருந்தது. நமது மரபுவழிப் பாரம்பரியமான பரதக்கலையின் வாசத்தை அள்ளித்தெளித்திருந்தார் தயாரிப்பாளர்.

நிகழ்ச்சியில் அடுத்து இடம்பெற்ற "பாதுகை" வரலாற்று நாடகம், ராமன் காடேகலும், பரதனுக்கு முடி சூட்டும்படியான கைகேயின் வரங்களும் விவரணமாகியிருந்தன. கம்பியூட்டர் யுகத்தில் நின்றுகொண்டு கம்பராமாயணத்தைப் பார்க்கும்போது, நவீனத்தோடு சங்கமித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு கொஞ்சம் பழைமையையும், அத்துடன் வரலாற்று உண்மையையும் அள்ளிக்கொடுத்தது பாதுகை நாடகம். அத்துடன் இன்றைய ஈழத்து நிகழ்வுகளோடு ஒப்பிடக்கூடியதாக அமைந்திருந்தது. ஈழத்தில் நாட்டுக்கூத்தில் புகழ்பெற்ற கலைஞர்கள் பெஞ்சமின் இமானுவேலும், கிரகிரி தங்கராசாவும் பாதுகையைத் தயாரித்தளித்திருந்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியாக கோமாளிகள் புகழ் அப்புக்குட்டி ராஜகோபாலின் சகோதரர் தீ, தயாநிதி எழுதி நடித்து, இயக்கிய "பாராட்டுவிழா" சமுக நாடகம் பராட்டக்கூடியதாக அமைந்திருந்தது. யதார்த்தமான பிரஞ்சையோடு அமைந்த நிகழ்வு இரும்பு இதயங்களையும் உருக வைத்திருக்கும் என்றால் அதுமிகையாகாது. நாடகத்தின் களம் ஈழமாக இருந்ததுடன், ஐரோப்பாவில் கலைகள் பற்றிய மக்களின் கோணலான நோக்கினை நகைச்சுவையாகவும் சொல்லியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பாரிஸ் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் வளர்ச்சி உண்மையான கலைக் கருவூலங்களைச் சிருஷ்டித்து மக்களுக்கு வழங்குமென்ற நம்பிக்கை தெரிகிறது.

— தகவல் :- வேலணையூரான், பாரிஸ் —

* * * ∴ * * *

யூன் மாதம் 10ம் திகதி ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் "கலைக்கோலம்" என்ற கலைநிகழ்ச்சி "மெற்ரே சேகுர்" என்னும் இடத்தில் நடைபெறவுள்ளது. கலைநிகழ்ச்சிகளால் கோலமிடும் இந்நிகழ்ச்சி புதுமையான அம்சங்களுடன் மக்கள் மனங்களைத் தொடவிருக்கிறது. ஒன்றியம் நடாத்திய சர்வதேச ரீதியான சிறுகதைப்போட்டி முடிவுகளையும் இந்நிகழ்ச்சியின்போது அறிவிக்கவுள்ளனர்.

## ST. PATRICK'S DAY

சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர்கட்கு வணக்கம்!

நாம் இவ்வாண்டு சம்பத்திரிசியார் விழாவை மேற்கு ஜேர்மனியில் சிறப்பாக நடாத்த உத்தேசித்து இது விடயமாக பழைய மாணவர்கள் அனைவரையும் தொடர்பு கொள்ள முயற்ச்சிக்கிறோம். எமது முயற்சி வெற்றியளிக்க தாங்கள் அனைவரும் பெயர் பிறந்த திகதி, திருமணமானவரா / இல்லையா? என்ற தகவல்களை கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். அத்துடன் இது விடயமாக தங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

நன்றி-வணக்கத்துடன்
பழைய மாணவர்கள்

W. GUTSS,
ND. RAMSTAEDTER STR. 179 A/2,
6100 DARMSTADT
WEST GERMANY.
6151 45685

"தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று நாமக்கல் கவிஞர் பாடியுள்ளார்.

தமிழனின் தனிக்குணம் என்ன தெரியுமா?


ஒரு கூடையில் நண்டுகளை அடைத்து வந்திருந்தார்கள். கூடையில் இருந்து வெளியில் வர, ஒரு நண்டு மேலே ஏறி வந்தது. உடனே வேறொரு நண்டு அதன் காலைப் பிடித்துக் கீழே இழுத்துப் போட்டது. பிறகு இந்த நண்டு மேலே ஏற முயற்சித்தது. 3வது நண்டு ஒன்று இந்த நண்டின் காலை இழுத்துக் கீழே போட்டது.

இந்த நண்டுக் குணந்தான் இன்றைய தமிழனுக்கும். தானும் முன்னேற மாட்டான். அடுத்தவனையும் முன்னேற விட மாட்டான்.

தமிழா! தமிழனின் நலத்தைக் காப்பதிலாவது ஒன்று படு. ஒரே குரல் கொடு. இல்லாவிட்டால் நீ உருப்படவே மாட்டாய்

— நன்றி ராணி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடமிருந்து.....

ரவிச்சந்திரா
மகேஸ்வரன்
ராம்நாத்
யோகராஜா
லதாங்கி
கலையரசன்

THE ACADEMY OF INDIAN MUSIC & CULTURAL STUDIES AUSTRALIA நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கர்நாடக இசை நிகழ்ச்சி கடந்த 08.04.90 ஞாயிறு மாலை 7 மணிக்கு COLLINGWOOD COMMUNITY மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. காதிற்கினிய இசை மழையைப் பொழிந்த கலைஞர்கள் செல்வி லதாங்கி, செல்வன் கலையரசன், செல்வன் யோகராஜா ஆகியோர் நமக்கு புதியவர்களானாலும் அவர்களின் தந்தை சங்கீதபூசனம் ஸ்ரீ A.S இராமநாதனை யாவரும் அறிவர். யாழ் இராமநாதன் கல்லூரியில் இசைப்பீடத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி ஈழத்தில் பல சங்கீத இரத்தினங்களை உருவாக்கியவர். அவர் உருவாக்கிய இரத்தினங்களில் ஒன்று தான் மேற்கூறப்பட்ட நிறுவனத்தின் ஸ்தாபகர் திரு ம.ரவிச்சந்திரா.

இந்தியாவிலிருந்து சிட்னிக்கு பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கு இசையூட்ட வந்திருந்த இந்த கலைஞர்கள் திரு.ரவிச்சந்திராவின் அழைப்பை ஏற்று இங்கு மெல்போனிற்கு வருகை தந்திருந்தார்கள். இம்மூவரும் தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைகழகத்தில் கர்நாடக இசைத்துறையில் சங்கீதபூசனம் பட்டம் பெற்றவர்கள்.

இரண்டு பகுதிகளாக நடைபெற்ற இந்த இசை நிகழ்ச்சியின் முதற்பகுதியில் ஆவலுடன் திரண்டிருந்த இசைப்பிரியர்களுக்கு செல்வி லதாங்கி தனது இனிமையான குரலால் காதுகுளிரூட்டினார். இவர் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. இராமச்சந்திரனாலும், தற்போதைய முதலமைச்சர் திரு.கருணாநிதியினாலும் தங்கப்பதக்கங்கள் கொடுத்து கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரிற்கு பக்கவாத்தியங்களாக செல்வன் கலையரசன் வயலினிலும், செல்வன் யோகராஜா மிருதங்கத்திலும் தமது திறமையைக்காட்டி சகோதரியின் குரலிற்கு மெருகூட்டினார்கள். இவ்விரு சகோதரர்களின் கலைத்திறன்களை அறிந்த இந்திய அரசு, இவர்களை ரஷ்ய நாட்டிற்கு சிறப்பு கலைஞர்களாக அனுப்பி கௌரவித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியின் இரண்டாவது பகுதியில் இம்மூவருடனும் மெல்போன் கலைஞர்களான திரு. ராம்நாத் வீணையிலும், சங்கீதபூசனம் திரு ரவிச்சந்திரா மிருதங்கத்திலும், கலாநிதி திரு மகேஸ்வரன் கஞ்சீராவிலும் இணைந்து 'நாதங்கி' என்னும் இசைக்கருவிகளினூடான சிறப்பு நிகழ்ச்சியை அளித்தனர்.

பல கால இடைவெளியின் பின்னர் சிறந்த கர்நாடக நிகழ்ச்சியை கண்டுகளிக்கக்கூடிய சந்தர்ப்பம் மெல்போன் மக்களிற்கு கிடைத்தது. மூன்று மணிநேரம் நடைபெற்ற இந்த 'இசை மழை' பல வருடங்களிற்கு மக்களின் மனதில் நிறைந்திருக்கும் என்பது திண்ணம்.

அவுஸ்திரேலிய நிருபர்
அரவிந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோடி சேர்ப்போமா

* மணமகள் வயது 27.லண்டனில் இறைவரித் திணைக்களத்தில் வேலை செய்கிறார்.அகதி அந்தஸ்தில் இங்கு வந்தவர்.நல்ல வேலையும் நிரந்தர வதிவிடமும்(யு.கே.பிரஜை)உள்ள மணமகன் விண்ணப்பிக்கலாம்.வயது சுமார் 35 இருக்க வேண்டும்.(விளம்பர இல:01)

* மணமகள் கொழும்பில் வேலை பார்க்கிறார்.வயது 25.மணமகன் இங்கிலாந்தில் மாணவனாகவோ அல்லது நிரந்தரப் பிரஜையாகவோ இருக்கலாம்.வயது சுமார் 32 இருக்க வேண்டும். (விளம்பர இல:02)

* மணமகள் இங்கு காரியாலம் ஒன்றில் வேலை பார்க்கிறார்.வயது 21.அகதி அந்தஸ்தில் இங்கு இருக்கிறார்.மணமகன் கத்தோலிக்க சமயத்தவனாகவும் வயது சுமார் 25 அல்லது மேல் இருக்கலாம்.(விளம்பர இல:03)

* மணமகன் சிவில் பொறியியலாளராக இருக்கிறார்.வயது 29. மாணவ அந்தஸ்து.மணமகள் இங்கு தங்கியிருப்பவராகவும் வேலை செய்பவராகவும் இருக்க வேண்டும்.வயது சுமார் 21-24. (விளம்பர இல:04)

* மணமகன் சுப்பர் மார்க்கட்டில் வேலை செய்து கொண்டு படிக்கிறார்.அகதி அந்தஸ்து.வயது 27. மணமகள் இந்த நாட்டுப் பிரஜாவுரிமை பெற்றவராகவும் வேலை செய்பவராகவும் வயது சுமார் 19-23 வரை இருக்க வேண்டும்.(விளம்பரஇல: 05)

-விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விளம்பர இலக்கத்தையும் அலை ஓசையின் முதற்பக்கத்தில் உள்ள முகவரியையும் எழுதித் தொடர்பு கொள்ளவும்.அனைத்து விபரங்களும் மிக இரகசியமாக வைத்துக் கொள்ளப்படும்.-


## SHIPPING — AIR FREIGHT — TRAVEL

UNACCOMPANIED BAGGAGE
PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS,
VEHICLES, MACHINERIES ETC.

*We supply Tax Free Goods for export to*

★ SRI LANKA ★ INDIA ★ PAKISTAN ★ AUSTRALIA AND OTHER FAR EAST COUNTRIES ★ CANADA ★ USA ★ AFRICA AND OTHER WORLD DISTINATIONS

*We collect. We pack, We insure.*

**WE WILL FLY YOU ANY WHERE, ANY TIME ON SCHEDULED FLIGHTS AT LOW PRICES**

**GLEN CARRIERS LIMITED**

14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ
Tel: 081-740 8379/081 749 0595
Fax: 081-740 4229 Telex 929657 Glenca G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் களஞ்சியம்


## Stories of the gods

Unlike Christians with the Bible or Muslims with the Qur'an, Hindus do not have just one book that is especially holy. Most Hindus know about the Vedas. These are the ancient scriptures, which priests still use in special ceremonies. But much better known and loved are the stories of the gods. They are told for many reasons – to teach people the right way to live, to help people understand what God is like, to make people laugh! These tales have been gathered together in many different books and have been passed down by parents to their children for generations. Here are a few of these stories.

Here is one story of how Ganesh got his elephant head.

One day, Ganesh's beautiful mother, Parvati, was enjoying a perfumed bath. She had asked Ganesh to stand outside the door and make sure she wasn't disturbed by anyone.

Now Parvati's husband, Shiva, happened to arrive home after a long time away. You can imagine he wanted to see Parvati at once! But Ganesh refused to let him in, because of his mother's instructions.



Shiva became very angry and, after a rather violent fight, he beheaded his obstinate son. Parvati was grief-stricken. Overcome with remorse, Shiva cut the head off the first animal he could find – an elephant – and put it onto Ganesh's body. The boy came back to life, but as you can guess, his new head had large ears and a trunk!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tamil Refugee (Action Group) Housing Association

Office 3, 2nd Floor, Millmead Business Centre, Millmead Road, London N17 9QU

Tele: 081 - 365 0892 & 081 - 365 0894

TR(AG)HA a successful, leading Housing Association providing housing for Tamil Refugees in the London Boroughs, requires the following personnel to launch them into a new phase of development in the 1990's.

COORDINATOR - ( 13,268.00)

Answerable to the Chairman and the Committee of management. Responsible for the overall management of the organisation; for the supervision and control of staff; for the procurement and management of short amd medium life properties and permanent tenancies; for the selection of licencees and the provision of welfare services and other reasonable amenities.

Applicants should be able to demonstrate community awareness particularly in relation to Tamil refugees; have proven managerial ability and well developed communication skills in dealing with issues relating to Housing, Welfare Benefits, Health, Education, Training and other matters concerning the Tamil refugees.

WELFARE WORKER - ( 9320.00 - 11,062.00)

Responsible for offering advice on Housing matters and Welfare benefits; for the maintenance of the Association's houses and for creating and facilitating a sociable and suitable environment by regular visits to the properties and by estabilishing links and contacts with other housing organisations, social security departments and housing benefit offices through attending the meetings of the various institutions.

Experience in the above skills is desirable.

Knowledge of Tamil is essential for both posts.
Salary is inclusive of London Weighting.

Applications in writing enclosing full CV to:

Secretary,
Tamil Refugee (Action Group) Housing Association Ltd.,
2nd Floor,
Millmead Business Centre,
Mill Mead Road,
London N17 9QU.

before 8 June 1990. Interviews will be held on 16/17 June 1990.

TR(AG)HA is an Equal Opportunities Employer and the above posts are funded by London Boroughs Grants Scheme.

(Registered under Industrial and Provident Societies Act 1965, Reg: No: 25085 R)

A Member of the National Federation of Housing Associations

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *CAPITAL AUTOS*

- *RECOVERY SERVICE*
- *COMPUTER TUNING*
- *WELDING, RESPRAYS*
- *PRE MOT CHECKS*
- *INSURANCE WORK*
- *ALL MECHANICAL & ACCIDENTAL REPAIRS*
- *FREE ESTIMATES*
- *VW AUDI SPECIALIST*
- *VW AUDI 2nd HAND CAR SPARES*
- *2nd HAND CARS SALES*



CONTACT:



N.Ratha
(Proprietor)

311, Sprowston Mews,
Forest Gate E 7
(Rear of 311 Romford Road)

**TEL: 081 519 6187 081 519 3041 0860 570031**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org